# பவளதீபம்



உயர்திரு சின்னத்தம்பி பவளகுமாரன்

அவர்களின்

## மணி விழாச் சிறப்புமலர்

## 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவள தீபம்

அதிபர்

திரு. சின்னத்தம்பி பவளகுமாரன்

அவர்களின்

## மணிவிழாச் சிறப்பு மலர்




**1985-2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவள தீபம்

(மணிவிழாச் சிறப்பு மலர்)

**தொகுப்பு**

மணிவிழா மலர்க்குழு
யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

**பதிப்பு**

மணிவிழா பதிப்பு 2022

**உரிமை**

யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
நாவற்குழி - கைதடி.

**பக்கம்**

vii + 80

**வெளியீடு**

யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

**அச்சுப்பதிப்பு**

**Mickey Printing Specialist**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்




**உயர்திரு சின்னத்தம்பி பவளகுமாரன்**
B.ED, Sci.Td, SLPS-I

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தி அகமகிழ்வோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா செயற்குழு

தலைவர் :- திருமதி த.மகாதேவன்

செயலாளர் :- திரு ப.அங்கசன்

பொருளாளர் :- திருமதி த.சதீஸ்குமார்

செயற்குழு உறுப்பினர்கள்

:- சி.கிருஷ்ணமூர்த்தி
திரு.த.துளசிகரன்
திரு.ச. ஜெனில்சங்கர்
திரு. சூ.ஜெபநேசன்
திருமதி.க.சிவானந்தம்
திருமதி ப. ஆஷா தமயந்தி
திரு. ஐ. தெய்வேந்திரம்
திரு. இ.யோகேஸ்வரன் ப.மா
திரு.க.மயில்வாகனம் ப.மா
திரு. கோ.ஜீவபாலன் பா.அ.ச.உ
திரு. க. அன்ரன் தேவகுமாரன் பா.அ.ச.செ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா மலர் வெளியீட்டுக்குழு

| | | |
|---|---|---|
| **தலைவர்** | :- | திரு சி.கிருஷ்ணமூர்த்தி |
| **செயலாளர்** | :- | திரு ந.சிவகுமார் |
| **பொருளாளர்** | :- | திருமதி த.சதீஸ்குமார் |

**நூலாக்கக்குழு உறுப்பினர்கள்**

:- திரு.விக்கினேஸ்வரன்
திரு. த.துளசிகரன்
செல்வி.யசோதா நடராஜசுந்தரம்
திருமதி. பி.தமிழ்ச்செல்வன்
திருமதி. ந.தணிகாசலம்
திரு.சி.ஆறுமுகதாசன்
திருமதி. சு. சிறிகாந்தன்
திருமதி கோ.கேதீஸ்வரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகிபாகத்தை வென்ற அதிபர்



சர்வ வல்லமை படைத்த அதிபர் உயர் திரு.சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களின் மணி விழா சிறப்பு மலரின் இதழாசிரியராக இருப்பதில் பேரானந்தம் கொள்கின்றேன். அதிபர் அவர்கள் முக்குணங்களில் சாத்வீக குணத்தினைச் சதா வசீகரப்படுத்திக்கொண்டே இருப்பவர். வன் சொற்களைப்பேசி மற்றவர்களை மனம்நோக வைக்காத ஒரு மகத்தான அதிபர். இக் காலத்தில் அப்படி இருப்பதென்பது அது அவரால் தான் முடியும். மென்போக்கும், இனிய சொற்களும் எப்பொழுதும் எம்மைச் சூழ உள்ளவர்களை மகிழவைத்த அதில் வெற்றியும் கண்டவர். எமது அதிபர் பாடசாலையில் எக்காரியமோ அத்தனையும் அதற்குரிய வகிபாகத்தினை ஏற்று செய்து முடிக்கும் வினைத்திறன் மிக்க அதிபர். அது பௌதிக வளமாகட்டும், மாணவநலன்புரி ஆகட்டும், பாடசாலை சமூக உறவாகட்டும், இணைபாடவிதனமாகட்டும், பாடசாலை கல்விநிலை ஆகட்டும், கல்வி அபிவிருத்தி ஆகட்டும் அவ்வவற்றிற்குரிய வகிபாகத்தினை ஏற்றுச் செய்து முடிக்கும் ஆளுமையுள்ள அதிபர் தான் திருவாளர் பவளகுமாரன் அவர்கள். அவர்களுக்கு இத்தகைய மலர் வெளியிடுவதென்பது சாலப் பொருத்தமானதே.

**திரு.பா.விக்கினேஸ்வரன்,**
இதழாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

1) மணிவிழாச் செயற்குழு

2) மணிவிழா மலர்க்குழு

3) இதழாசிரியர் உள்ளத்திலிருந்து

3) பொருளடக்கம்

4) ஆசி கூறி உவப்போர்

5) வாழ்த்தி அகம் மகிழ்வோர்

6) வாழ்க்கைத் தடங்கள்

7) ஆளுமைமிக்க அதிபராக...

8) பொதுவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிகூறி உவப்போர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை ஆதீன முதல்வரின்
# அருளாசிச் செய்தி



அன்புள்ளவர்களுக்கு...

யா/நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திரு. சின்னத்தம்பி பவளகுமாரன்இன்று மணிவிழா காண்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்டு அதிபராக கல்விப் பணிக்கு தன்னை அர்ப்பணம் செய்து இன்று ஓய்வுநிலை அடைவதையிட்டும் கல்விக் கண்ணைத் திறந்து பல மாணவ சமுதாயத்தை வளர்த்ததையிட்டும். இவர்களின் பணியை சிறப்பித்து விழா எடுக்கும் அனைவருக்கும் வாழ்த்துக்கள். இவரின் ஓய்வுடன் இவரின் பணிகள் மென்மேலும் தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**
**குருமுதல்வர்,**
**திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் காணும் ஆசிரிய நண்பனுக்கு ஆசிகள்
# பிரதமரின் இந்துமத விவகார இணைப்பாளர்



எனது பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய நண்பர் சி.பவளகுமாரன், மிகுந்த நட்புறவோடும், பண்போடும், பழகும் குணம் கொண்டவர். மிகுந்த சுறுசுறுப்புடன் இருப்பவர். ஆசிரியர் கல்வி போதனை மட்டுமல்லாமல் சமூக செயற்பாடுகளிலும் பங்குகொள்ள வேண்டும் என்பதற்கமைய பவளகுமாரன் தனது பணிகளை முன்னெடுத்துள்ளார். அதிபர் சேவையில் ஓய்வு பெற்றாலும் தான் சார்ந்த சமூக பணிகளை மேலும் முன்னெடுப்பார் என்பதில் ஐயமில்லை. பலரால் பாராட்டப்படும் அவரது சமூகப்பணி மேலும் தொடர ஆசிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி

**Dr.சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா**

புத்தசாசன, மத, விவகார மற்றும் கலாச்சார

அமைச்சினதும் கௌரவ பிரதமரின் இந்துமத விவகார இணைப்பாளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



"தக்கார் தகவிலர் என்பது அவரவர்

எச்சத்தால் காணப்படும்" என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க ஈழமணித்திருநாட்டில் கைதடி தெற்குப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெருமதிப்பிற்குரிய ஆசான் சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களின் மணிவிழா குறித்து வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதற்கு வாய்ப்பு க் கிடைத்ததையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

ஆசிரியராக, அதிபராக, ஆலய அறங்காவலராக, சமூக சேவையாளராக, சமூகப்பற்றாளராக இவையனைத்திற்கும் மேலாக நல்லுள்ளம் கொண்ட மனிதராக பன்முகப்பட்டு பணியாற்றியவர் ஆசிரியர். சி. பவளகுமாரன் அவர்கள்.

பதினேழு வருட ஆசிரியப் பணி, இருபது வருட அதிபர் சேவை முப்பத்தேழு வருட அரச சேவையில் உருவாக்கிய மாணவச் செல்வங்கள் ஏராளமானோர் உள்ளனர். கணித, விஞ்ஞான பாடங்களைச் செம்மையுறக் கற்பிப்பதில் தனித்துவம் மிக்கவர். இவர் களு/ மத்துகம சாந்தமேதி மகாவித்தியாலயம், யா/ நாவற்குழி மகாவித்தியாலயம், யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம். ஆகிய பாடசாலைகளில் தனது அர்ப்பணிப்பான சேவையை வழங்கி அப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் வாண்மை விருத்திக்கும் பற்றுறுதி வாய்ந்த பணிகளை ஆற்றியுள்ளார்.

கைதடி வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைப் பொருளாளராக, உப தலைவராக அங்கம் வகித்தும், கைதடி அரிமாக் கழக அங்கத்தவராகவும், கைதடி பொது நூலக அபிவிருத்திச் சபை உறுப்பினராகவும் அணிசேர்ந்து ஆக்கபூர்வமான பணிகளை ஆற்றியதோடு தன்னால் இயன்ற பணிகளை இன்றுவரை செய்து வருகின்றார்.

இத்தகைய உன்னத சேவையாளர் ஒருவருக்கு மணிவிழா எடுக்கப்படுவது பெருமைக்குரிய, பாராட்டுக்குரிய விடயமே. அவர்தம் பணியை நினைவு கூறுவதோடு எம் சமூகத்தவரை விழிப்படையச் செய்யவும் இந் நிகழ்வு உதவும் என்பதில் ஐயமில்லை. அவர்தம் பணி தொடரவும், நிலைத்த தேகாரக்கியத்தோடும், நிறைந்த ஆயுளோடும் சுற்றங்கூடி இனிது மகிழ்ந்து வாழ எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருள் கைகூட வேண்டும் என்று பிரார்த்தித்து எனது ஆசிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.


**பிரம்மஸ்ரீ இ. கஜராஜக்குருக்கள்.**

பிரதமகுரு சித்திவிநாயகர் கோவில்,

நாவற்குழி மேற்கு. கைதடி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய பிரதம சிவாச்சாரியார் வழங்கிய ஆசியுரை



"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு"

இலங்காபுரியின் வட பால் அமைந்துள்ள யாழ் மாநகரின் தென்மராட்சிப் பகுதியில் பல எழில்கொண்டு எழுந்துநிற்கும் புகழ்பூத்த பல ஆலயங்கள் மத்தியில் தன்னை நம்பிவரும் அடியார்கள் குறைதீர்த்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் வீரகத்திப் பெருமான் ஆலயம் அமைந்திருக்கும். புண்ணிய பூமியாம் கைதடிப் பதியில் அன்பும் பண்பும் நிறைந்த அதிபர் சின்னத்தம்பி பவளகுமாரன் 1962ஆம் ஆண்டு பிறந்தார். ஆரம்பக்கல்வியை யாழ் கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்றார். படிப்பிலும் நல்லொழுக்கத்திலும் நற்பண்பிலும் சிறந்த மாணவனாகவும் கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டுத்துறை, பொது நூல் வாசித்தல் போன்றவற்றிலும் ஈடுபாடு உடையவராகச் சிறந்து விளங்கினார்.

சிறந்த கல்வியில் முன்னேறி தராதரப்பத்திரம் பெற்ற கணித விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றி பயிற்றப்பட்ட (B.Ed) ஆசிரியராகவும் 1985 - 2002 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் களுத்துறை மத்துகம சாந்மேரி மகாவித்தியாலயம், நாவற்குழி மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்னர் அதிபராக பதவி உயர்வு பெற்று தான் ஆரம்பக் கல்வி பயின்ற யாழ்.கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்திலும், தற்போது நாவற்குழி மகாவித்தியாலயத்திலும் அதிபராகக் கடமையாற்றி வரும் இந்த விழாவின் நாயகன் அவர்கள் அதிபர் கடமையிலிருந்து ஓய்வுபெறுவது கல்வி சமூகத்திற்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகத்தான் அமையும் என்பதில் ஐயமில்லை. சுமார் 35 வருடங்கள் கல்விச் சேவையாற்றியதுடன் கூடவே பொதுச் சேவைகள் மற்றும் ஆன்மீகப் பணியில் கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில் பரிபாலன சபையில் பொருளாளராகவும் பின்னர் உபதலைவராகவும் பணியாற்றியும் கைதடி லயன்ஸ் கழக அங்கத்தவராகவும் கைதடி பொது நூலகத்தில் சபை உறுப்பினராகவும் தன்னை சமூக சேவையிலும் ஈடுபடுத்தி பொதுமக்களிடம் நன்மதிப்பையும் பெற்றுக்கொண்டார். அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவர் ஆற்றிய சேவை என்றென்றும் மற்றவர்கள் மனதைவிட்டகலாது. அவர் கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவரிடம் கல்விபயின்ற மாணவர்கள் உயர்கல்வி பெற்று சமூகத்தில் நல்லவராக இருப்பது பெருமைப்படக்கூடிய விடயமாகும். சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களுக்கு என்றென்றும் வீரகத்தி விநாயகரின் பரிபூரண அனுக்கிரகம் கிடைக்கப்பெற்று அவரும் குடும்பத்தாரும் பல்லாண்டு காலம் மண்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டும் என விநாயகரின் பாதம் பணிந்து நல்லாசி வாழ்த்தினைக் கூறுகின்றேன். வாழ்க வளமுடன்

இங்ஙனம்,

**சிவஸ்ரீ இ. புஸ்பராசக்குருக்கள்**

**பிரதம சிவாச்சாரியார், கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி இணுங்கித்தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி ஆலயப் பிரமகுரு வழங்கிய ஆசியுரை



திரு.பவளகுமாரன் அதிபர் அவர்கள் பல வருஷங்களாக முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தில் அதிபராக சிறந்த கல்விச் சேவை ஆற்றி உள்ளார். அதிபர் அவர்கள் நாவற்குழி மகாவித்தியாலத்திலும் அதிபராக கடமை ஆற்றி உள்ளார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார்
வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வள்ளுவன் வாக்கின்படி சிறந்த கல்விச் சேவை ஆற்றி உள்ளார். இவரின் ஓய்வு நிலை இனிமையாக அமைய வேண்டுமென இணுங்கித் தோட்டத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ சண்முகபெருமானை மனதார வணங்கி நல் ஆசிகள் வழங்குகின்றோம்.

இங்ஙனம்

**யோ.குருசாமிக்குருக்கள்,**

**கைதடி இணுங்கித்தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி ஆலய பிரதம குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



அதிபர் பணியிலிருந்து ஓய்வு பெறும் சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களை நல்நாதர் இயேசுவின் இனிய நாமத்தில் கொண்டு ஆசியுரை எழுதுகிறேன்.

37 வருட காலம் உலகில் மிகச்சிறந்த பணிக்காலமான அதிபர் பணிக்காலத்திலிருந்து ஓய்வு பெறுகிறீர்கள். 17 ஆண்டுகள் ஆசிரியராகவும் 20 வருடங்கள் சிறந்த அதிபராகவும் கல்விப்பணிக்காக முழுமையாக அர்ப்பணித்து பணி செய்திருக்கிறீர்கள்.

இக்கட்டான பல்வேறு சிரமங்கள் மத்தியிலும் ஆசிரியர்களோடும் சமூகத்தோடும் இணைந்து பல்வேறு சமூக நலத்திட்டங்களையும் சிறந்த அர்ப்பணிப்புடன் செய்திருக்கிறீர்கள்.

ஐயா: உங்கள் ஓய்வு பெறும் காலங்களில் நோய் நொடியின்றி உங்களால் இயன்ற நற்பணிகளை செய்துவர இறையாசி கூறி நலமுடன் வாழ வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

நன்றி

அன்பான குருவானவர்,

**அருட் திரு. K.A. செல்வநாயகம்,**

தென்னிந்திய திருச்சபை சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



திரு.சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்கள் கடந்த 07 வருடங்களாக யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்து சேவையாற்றி இப்போது அவர் ஓய்வு நிலையில் உள்ளார். இவரது ஓய்வு இப்பாடசாலை மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் ஒரு பேரிழப்பாகும். அவர் ஆற்றிய சேவையை வார்த்தைகளால் சொல்லி விட முடியாது. இப்பணிக்கு முற்றும் முழுதாக தன்னை அர்ப்பணித்து மாணவர்களை மனித நேயத்தில் வளர்த்து எல்லா மாணவர்களின் கல்வியிலும் அக்கறை கொண்டு இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்து அயராது உழைத்து வெளிநாடு வாழ் ஒன்றியத்தின் ஒத்துழைப்புடன் பல கட்டிடங்களையும், மாடிக் கட்டிடங்களையும் கட்டி இப்பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். அளப்பரிய பணியாற்றி ஓய்வு பெறும் நிலையில் அதிபர் அவர்களை மனமார வாழ்த்தி நிற்கின்றேன். அவரது ஓய்வு காலங்கள் மிகச் சிறப்பாக தன்குடும்பத்தாருடன் பல்லாண்டு காலம் வாழ்ந்திட புத்த பிரானின் ஆசி வேண்டி இவ் ஆசி உரையை நன்றியுணர்வுடன் கூறி நிற்கின்றேன்.

நன்றி

**ஹங்வெல்லே ரதனசிரீ தேரர்,**

விகாராதிபதி,

ஸ்ரீ சம்த்தி சமண விகாரய. நாவற்குழி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி மண் பெற்றெடுத்த கல்வியாளன் சின்னத்தம்பி பவளகுமாரனுக்கு மணி விழா வாழ்த்துக்கள்.



சைவமும் தமிழும் தழைத்தோங்கி கந்தபுராண கலாசாரத்தினை பின்புலமாகக் கொண்ட மரபார்ந்த யாழ்ப்பாண மாவட்டத்தின் நுழைவாயிலாம் தென்மராட்சிப் பதியின் சம்பும் குன்றும் நிறைந்த கிராமமாக விளங்கும் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் அதிபராக சேவையாற்றும் கரம்தண்டம் எனச் சின்னத்தம்பிப் புலவரால் வியந்து போற்றப்பட்ட கைதடியில் அவதரித்த புதல்வனாம் சின்னத்தம்பி பவளகுமாரன் தனது ஆசிரியர் சேவையினை ஆரம்பித்து அதிபர் சேவையில் உயர்ந்து பல நல் மாணாக்கரை இம் மண்ணில் உருவாக்கி மணிவிழாக் கொண்டாடும் நாயகனை வாழ்த்தக் கிடைத்த சந்தர்ப்பம் மகிழ்ச்சிக்குரியது.

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக - கல்வியியல் கலைமாணியாக (B.ed) 1985 ஆம் ஆண்டு இலங்கையின் கழுத்துறை மாவட்டத்தில் சாந்தமேதி மகாவித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களிலும் சேவையாற்றிய இவர் தனது சொந்த ஊரான கைதடி மற்றும் நாவற்குழி ஆகிய இடங்களிலும் ஆசிரியப் பணியினை செவ்வனே செய்து வரும் காலத்தில் இலங்கை அதிபர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயத்திலும் பின்னர் நாவற்குழி மகாவித்தியாலயத்திலும் தனது அர்ப்பணிப்புமிகு கல்விப்பணியினை ஆற்றி வருகின்றமை போற்றுதற்குரியது.

முத்து முத்தான மாணவச் செல்வங்களை வழிப்படுத்தி வெறுமனே பரீட்சையை மையப்படுத்திய கல்வியிலிருந்து அவர்களை முன்னோக்கிச் செல்ல வைப்பதுமட்டுமன்றி தேசத்தின் நற்பிரஜை களாக்கி நாட்டின் நாளைய தலைவர்களாக்குவதும் எதிர்காலத்தின் சிற்பிகளாக உருவாக்குவதும் கல்விப்புலம் சார்ந்தோரின் முக்கிய பொறுப்பும் கடமையுமாகும். அதனை செவ்வனே நிறைவேற்றுபவன் வையத்துள் தெய்வமாக போற்றப்படுகின்றான். தம்மை நம்பி வருகின்ற மாணவர்களின் கல்விக்காக நாளும் பொழுதும் தாம் கற்று அதனை மாணவர்களுக்கு படிப்பிக்கின்றனர். இதனால் தான் ஆசிரியர்கள் படிப்பிச்சுக் கொடுப்பவர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர். இத்துணை பண்பில் மணிவிழா நாயகன் சின்னத்தம்பி பவளகுமாரன் தன்சேவையில் மன நிறைவு பெற்றவராக விளங்குகின்றார் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருவாளர் பவளகுமாரன் அவர்கள் கல்விசார் செயற்பாட்டாளர் என்பதற்கப்பால் தான்சார்ந்த ஊரின் சமூகநலத் திட்டங்களிலும் அக்கறையுடையவர். அவர் பல்வேறு சமூக அமைப்புகளில் தன்னை இணைத்து சேவையாற்றுவது இதனை மேலும் வலுப்படுத்துகின்றது எனலாம். கைதடி லயன் குழுமத்தில் தொடர் சேவையாற்றும் இவர் கைதடி பொநூலக அபிவிருத்திச் சபை உறுப்பினராக செயற்படுவதுடன் கைதடி வீரகத்தி விநாயகராலய பரிபாலன சபை பொருளாளராகவும், பொதுச்சபை உறுப்பினராகவும் பணியாற்றியமை இவரது சேவை மனப்பாண்மையினை - மனிதநேயப்பண்பினை நன்குணரச் செய்கின்றது.

திருவாளர் பவளகுமாரன் அவர்கள் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் அதிபராக 2015 ஆம் ஆண்டு பொறுப்பேற்றதிலிருந்து இன்றுவரை கல்வியில் நல்ல முன்னேற்றங்களை ஏற்படுத்திய பெருமைக்குரியவர். இவரது அயராத சேவையின் மதிப்பினை நன்குணர்ந்த அன்பர்கள், நலன்விரும்பிகள், ஆதரவாளர்கள்,பாடசாலைச் சமூகம் என அனைவரும் ஒன்றிணைந்து ஒரு கல்வியியலாளனின் மாண்புறு சேவையினை பெருமைப்படுத்த முனைந்திருப்பது கல்விச் சமூகத்திற்கு ஓர் முன்னுதாரணமாக விளங்குகின்றது என்பதில் ஐயமில்லை.

கல்விச் சேவையில் மனநிறைவு கண்ட மணிவிழா நாயகன் சின்னத்தம்பி பவளகுமாரன் மேலும் முன்னோக்கிச் சென்று கல்வியினால் நற்சமூகமொன்றினை உருவாக்கி நம் மண்ணும் தேசமும் அறிவியற் சமூகமாக மேற்கிளம்ப துணைநிற்பார் என சிந்தையிலிருத்தி மணிவிழா நாயகனை வாழ்த்தி அமைகின்றேன்.

**கணபதிப்பிள்ளை மகேசன்,**
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ்ப்பாண மாவட்டம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



யா/நாவற்குழி மகாவித்தியாலய அதிபராக கடமையாற்றி அகவை அறுபதில் ஓய்வுபெறும் திரு சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களது மணிவிழாவினையொட்டி வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

1985 ஆம் ஆண்டில் ஆசிரியப்பணியினை ஆரம்பித்து அதிபர் பணியினைச் சிறப்பாக ஆற்றி ஓய்வு பெறுகின்றார். பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியரான இவர் கல்வி மாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார். இவர் ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் சிறந்த தொரு ஆசிரியராக செயற்பட்டவராவார். யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் மூன்று வருடங்கள் பிரதி அதிபராகவும் ஒன்பது வருடங்கள் அதிபராகவும் சிறப்பாகப் பணியாற்றி 2015 ஆம் ஆண்டிலிருந்து யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தில் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெறுகின்றார்.

இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு ஓய்வுக் காலத்தில் தொடர்ந்து சமூகப் பணிகளில் ஈடுபட வேண்டி வாழ்த்துகின்றேன்.

**செ. உதயகுமார்**
மாகாண கல்விப் பணிப்பாளர்
வடக்குமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனுக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை



எமது வலயத்தினைச் சேர்ந்த யா/ நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் திரு.சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதில் அகமிக மகிழ்கின்றேன்.

இவர் தென்மராட்சிப் பதியிலே பிறந்து வளர்ந்து கல்வி பயின்று தன் பிரதேசப் பாடசாலையிலே அதிபராகப் பணிபுரிந்து ஓய்வு பெறும் பாக்கியம் பெற்றவர். தென்மராட்சி வலயத்தின் சிரேஷ்ட அதிபராகவும் நல்லாலோசகராகவும் நற்செயற்பாட்டாளராகவும் விளங்கியவர். பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக கல்விமாணிப் பட்டதாரியாக தன்னை வளர்த்துக் கொண்ட இவர் 17 வருடங்கள் ஆசிரியராகவும் 20 வருடங்கள் அதிபராகவும் கல்வித் துறைக்கு ஆற்றிய பணிக்கு இவரது மாணவர்களும், இவரது வழிகாட்டலில் கற்பித்த ஆசிரியர்களும் என்றென்றும் சான்றாய் விளங்குவர்.

கம்பீரக் குரலில் கணீரென்ற பேச்சில் அனைவரையும் கவர்ந்திழுத்த இவரின் மணிவிழா நாளில் தனது மனையாளுடன் முத்தான மூன்று கண்மணிகளுடனும் குடும்பமாய் குதூகலித்து வாழ்கவென வாழ்த்துகின்றேன். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் சமயப் பணியையும் சமூகப் பணியையும் தொடர்ந்து புரியும் வல்லமையை இறைவன் இவருக்கு அருளவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

பத்தரை மாற்றுத் தங்கம் போல்வான்
பள்ளியில் பாங்குடன் பல்பணி புரிந்த
பவளகுமாரன் நாமம் படைத்த
பண்புடை ஆசானாம் பட்டறிவு மிகு அதிபராம்
பதினாறு பேறும் பெற்று
பன்னெடுங் காலம் பாரெல்லாம் போற்ற
பாசமுடன் வாழ்த்துகின்றேன் வாழ்கவென!

**த. கிருபாகரன்**

வலயக் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றல் மிக்க ஆசான் ஆளுமை மிக்க நிர்வாகி



நான் பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெற்ற காலப்பகுதியில் திரு.சி.பவளகுமாரன் அவர்களின் நட்பு கிடைத்தது. அன்பாகவும் பண்பாகவும் பழகும் ஆற்றலுடையவராகவும் மற்றவர்களின் இன்ப துன்பங்களில் பங்கேற்பதுடன் நல்ல ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். எல்லோராலும் "பவளம்" என அன்பாக அழைக்கப்படும் நண்பன் கிரிக்கெட் விளையாட்டில் சிறந்த பல்துறை வீரனாக பரிணமித்து எமது விஞ்ஞான அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியமை பாராட்டத்தக்கதாகும்.

திரு.சி.பவளகுமாரன் ஒரு சிறந்த விஞ்ஞான ஆசிரியர் இவரிடம் கல்வி கற்ற பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் தமது வாழ்வில் மிகவும் உயர்வான நிலையில் இருப்பதை காணும் போது அது அவரின் ஆற்றலிற்கும் அர்ப்பணிப்பிற்கும் கிடைத்த பேறாகவே கொள்ள முடியும்.

அவர் அதிபர் சேவையில் உள்ளீர்க்கப்பட்ட பின் தென்மராட்சி கல்வி வலயத்தில் யா/கைதடி முத்துக்குமார சுவாமி வித்தியாலயம், யா/நாவற்குழி மகா வித்தியாலயம் என்பவற்றின் அதிபராக ஆளுமையுடன் பணியாற்றி குறித்த பாடசாலைச் சமூகங்களுடன் இணைந்து அம்மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிற்கும் உறுதுணையாக இருந்ததை நான் வடமாகாணக்கல்வி அமைச்சின் செயலாளராக இருந்த போது அறியக் கூடியதாகவிருந்தது.

திரு.சி.பவளகுமாரன் அவர்கள் ஆற்றிய கல்விப்பணி சமூகப்பணி என்பவற்றின் அறுவடையாக அவரது பிள்ளைகள் இன்று கல்வியில் உயர்ந்து விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். சமூக நோக்குடைய, உதவி செய்யும் மனப்பான்மையும் நட்புரிமையுடன் பழகும் சிறந்த குணாதிசயங்களை கொண்ட நண்பன் பவளகுமாரன் தனது ஓய்வு காலத்தில் இன்னும் பல சமய, சமூகப்பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் நல்ல தேகாரோக்கியத்துடனும் மனநிறைவுடனும் நீண்டகாலம் வாழ எல்லாம் வல்ல பரம்பொருளின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திப்பதுடன் எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி.சத்தியசீலன்**

மேலதிக பணிப்பாளர் நாயகம்

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

செத்சிறிபாய, பத்தரமுல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யா/நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் திரு. சின்னத்தம்பி பவளகுமாரன் மிகவும் சிறப்பாக சேவையாற்றி 20.04.2022 அன்றுடன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்கின்றார். இவர் அதிபராக கடமையாற்றிய 2015 தொடக்கம் 2022 ஆண்டு வரையான ஏழு வருட காலப்பகுதியின் போது இப் பாடசாலை பல்வேறு உயர்ச்சிகளை கண்டுள்ளது. பௌதீக வள கட்டுமானங்களில் புதிய கட்டட உருவாக்கம், விரிவான மாணவர் பிரார்த்தனை மண்டபம், மைதான சுற்றுமதில் புனரமைப்பு என்பன இவ் அதிபர் காலத்தில் மேற்கொள்ளப்பட்டவையாகும். மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றதுடன் குறிப்பிடத்தக்க மாணவர்கள் இக் காலத்தில் பல்கலைக்கழக அனுமதியையும் பெற்றுள்ளனர். நூலகச் செயற்பாடுகளை ஊக்குவித்து மாணவர்களிடையே வாசிப்புத் திறனையும் அதிகரிக்கச் செய்த பெருமை இவ் அதிபருக்கு உரியதாகும்.

இவ்வாறாகப் பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் உயரிய சேவையாற்றி ஓய்வு பெறும் அதிபர் திரு. சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களின் ஓய்வு காலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

**திருமதி சு. உஷா,**

பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்.

தென்மராட்சி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



திரு.சி.பவளகுமாரன் அவர்களின் மணி விழாவுக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன். திரு.சி.பவளகுமாரன் அவர்கள் தனது 37 வருட சேவையினை முடித்து 19.04.2022 அன்று ஓய்வு பெறுகிறார். அவர் தனது சேவையினை 17 வருடங்கள் ஆசிரியராகவும் 20 வருடங்கள் அதிபராகவும் ஆற்றியுள்ளார். தனது முதல் நியமனத்தினை மத்துகம சாந்தமேரி வித்தியாலயத்தில் பெற்று அதனைத் தொடர்ந்து தனது கடமையினை நாவற்குழி மகாவித்தியாலத்திலும் ஆற்றியுள்ளார். 2003ஆம் ஆண்டு பதவியுயர்வு பெற்று பிரதி அதிபராக கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலத்தில் 2006 ஆம் ஆண்டுவரை கடமையாற்றியவர் மீண்டும் பதவியுயர்வு பெற்று அதிபராக நாவற்குழி மகாவித்தியாலத்தில் ஓய்வு பெறும் வரை கடமையாற்றினார்.

அவர் ஒரு கடமை தவறாத ஆசிரியர். மாணவர்களை தன் பிள்ளைகள் போன்று கருதி சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். அவர் பிரதியதிபராக கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலத்திலும் அதிபராக நாவற்குழி மகாவித்தியாலத்திலும் கடமையாற்றியவேளை மாணவர்கட்கு சிறந்த ஒழுக்கத்தையும் பாடசாலைகளின் அபிவிருத்திக்காகவும் மேம்பாட்டுக்காகவும் தன்னலம் பாராது அயராது உழைத்த ஒரு கரும வீரர். நாவற்குழி மகாவித்தியாலத்தியத்தின் வளர்ச்சி இதற்கு எடுத்துகாட்டாக சான்று பகிர்கின்றது.

இவை தவிர இவரது கடமையுணர்வு பல பொதுப் பணிகளிலும் ஈடுபட வைத்ததை காட்டுகின்றது. பொதுப்பணிகளில் இவருடைய அயராத உழைப்பும் பாடசாலைகளின் அபிவிருத்திகளில் இவர் காட்டிய ஈடுபாடும் மாணவர்கள் மீது அவர் காட்டிய அக்கறையும் அவரது பிள்ளைகளை கல்வியில் மேம்பட உதவியுள்ளது. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பதற்கு இவருடைய கடமையுணர்வும் பிள்ளைகளின் வளர்ச்சியும் எடுத்துக்காட்டாக அமைகின்றது.

திரு.சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்கள் தனது ஓய்வு காலத்திலும் சமூகப்பணியினை செவ்வனே செய்து சகல சம்பத்துக்களும் பெற்று சுகதேகியாக நீடுழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் வசந்தி.அரசரட்ணம்**
*Senior Professor of Biochemistry and*
*Member of University Grants Commission*
*Department of Biochemistry,*
*Faculty of Medicine, University of Jaffna.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துச் செய்தி



20.04.2022 அன்று தனது 60 ஆண்டு அகவையைப் பூர்த்தி செய்து மணிவிழாக் காணும் அதிபர் திரு.சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இவர் கஞ/மத்துகம சாந்தமேரி மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்தார். தொடர்ந்து யா/கைதடி நாவற்குழி மகா வித்தியாலயம், யா/முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியர், பிரதி அதிபர் போன்ற பதவிகளை அலங்கரித்த இவர் யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்திலும் யா/நாவற்குழி மகா வித்தியாலயத்திலும் அதிபராக அயராது உழைத்தார்.

இன்றைய யதார்த்த சூழலில் எத்தனையோ சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையில் நேர்மை, அர்ப்பணிப்பு, அமைதியான சுபாவம், அனைவரையும் அன்புடன் அரவணைத்துச் செல்லும் மனித நேயம் மூலம் பாடசாலையை நன்முறையில் நடாத்திச் சென்று பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் நலனுக்கும் அர்ப்பணிப்புடன் உழைத்தார். சிறந்த நற்பண்புகளினால் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரது மனங்களிலும் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர். இவர் கல்விப் பணியுடன் நின்றுவிடாது சமய, சமூகப் பணிகளிலும் விருப்புடன் ஈடுபட்டுச் செயலாற்றுபவர்.

“கல்விப்பணி கடவுட்பணி காலம் முழுவதும் பயன்பெற்றோர் போற்றும் பணி” இப் புனித பணியில் ஈடுபடும் வாய்ப்பு அரிய பேறு எனலாம். அவ்வகையில் ஆசிரியராக, அதிபராக 37 ஆண்டுகள் நற்பணியாற்றி ஓய்வு பெறும் அதிபர் தனது ஓய்வு காலத்தில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவடிகளை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

**திருமதி. சிவத்திரை சிவநாதன்,**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
(கல்வி நிர்வாகம்).
மாகாணக் கல்வித் திணைக்களம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மணி விழா வாழ்த்துச் செய்தி



தென்மராட்சி வலயத்தின் நாவற்குழி மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி 19.04.2022 அன்று மணி விழாக் காணும் திரு.சி.பவளகுமாரன் அவர்களை வாழ்த்துவதிலும், கௌரவிப்பதிலும் பெருமகிழ்வடைகின்றேன்.

எமது வலயத்தில் கிட்டத்தட்ட 35 ஆண்டுகளுக்கு மேலாக கல்விப் பணியாற்றிய திரு.சி.பவளகுமாரன் அவர்கள் ஓர் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக, அதிபராக கைதடிப் பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றவராவார்.

தனது ஆளுமையாலும் தலைமைத்துவப் பண்பாலும் ஆசிரியர்களிடத்தும், மாணவர்களிடத்தும் நன்மதிப்பை பெற்று தற்போது மணி விழா காண உள்ளார். வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்தி, கல்வி நிர்வாகச் செயற்பாடுகளிற்கு சிறந்த ஒத்துழைப்பையும், பாடசாலையில் கலைத்திட்ட அமுலாக்கத்தை நடைமுறைப்படுத்துவதிலும் சிறப்பாகச் செயற்பட்டவர். மாணவர்களிடையே ஏற்படும் பிரச்சினைகள், தேவைப்பாடுகளை ஆராய்ந்து உரிய முறையில் தீர்வைப் பெற்றுத் தருபவர். பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துபவர்.

மணி விழாக்காணும் திரு.சி.பவளகுமாரன் அவர்கள் தனது ஓய்வு காலம் ஆரோக்கியமாகவும், மன நிறைவுடனும் சிறப்பாக அமைய இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

**செல்வி.இ.அபிராமி,**

பிரதிக் கல்விப் பணிப்பாளர் (தாபனம் மற்றும் பொது முகாமை)

வலயக் கல்வி அலுவலகம்,

தென்மராட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களங்கமற்ற கலங்கரை விளக்கம்



தென்மராட்சியில் பெயர் விளங்கும் அதிபர்கள் வரிசையிலே திருவாளர் சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களுக்கும் தனித்துவமான இடமொன்று உண்டு இன்று கல்விப்புலத்திலே சவால் நிறைந்த வகிபாகத்தை அதிபர்களே ஆற்றுகின்றார்கள். பவளகுமாரன் அவர்களும் பல சவால்களை எதிர்கொண்டு திறம்படச் செயலாற்றியவர் என்பதை நான் அறிகின்றேன்.

"நல்லாரைக் காண்பதும் நன்றே" எனத் தொடங்கும் மூதுரைப் பாடல் வரிகள்தான் எனக்கு இவரைக் காண்கின்றபோது ஞாபகம் வரும். நான் இவருடன் பழகியகாலம் சிறிதாயினும் இவரின் உயர்ந்த குணங்களால் மிக்க மரியாதையும் அன்பும் கொண்டிருக்கின்றேன். "பவளகுமாரன்" என்ற பெயருக்குப் பொருத்தமான பண்பாளன். சிரித்த முகத்தில், தன்னடக்கமும் இவரின் அடையாளங்கள். தனது நற்குணங்களாலும் கல்விப்புலம்சார் பணியாளர்களுடனும் அதிகாரிகளுடனும் நல்லுறவைப் பேணிவருவதுடன் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் சமூகத்தவர் போன்ற எல்லோர் மனங்களையும் வென்று பணியாற்றியுள்ளார். இதன் காரணமாக தனது சேவைக்காலங்களின் தென்மராட்சி வலயத்தில் பெயர் சொல்லக்கூடிய பல சாதனைகளையும் நிறுவியுள்ளார். அந்த வகையில் அதிபர் பவளகுமாரன் அவர்களின் சேவையை மனமுவந்து பாராட்டுகின்றேன்.

இன்னும் அவருடைய ஓய்வு காலத்தில் தனது ஆளுமைகளை தொடர்ந்து சமூகப்பணிகளில் ஈடுபடுத்தி கொள்ளவேண்டும் என்பதுடன் நல்ல தேக ஆரோக்கியத்துடனும் மன நிறைவுடனும், குடும்பம், சுற்றம் சூழ இனிதே நீண்டகாலம் இவ் மண்ணுலகில் வாழ்ந்து பெருமைபெற வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**திரு. ஆ. ஜெகதாசன்**

பிரதிக்கல்விப் பணிப்பாளர்

(கல்வி அபிவிருத்தி)

தென்மராட்சி கல்வி வலயம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனுக்கு மகிழ்வான வாழ்த்துக்கள்



யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தில் அதிபர் உயர்திரு சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

இருபது வருடங்களுக்கு மேல் ஆசிரியராகவும், பதினாறு வருடங்கள் அதிபராகவும் மொத்தமாக முப்பத்தேழு வருடங்கள் கல்விப் புலத்திலே கடமையாற்றி அகவை அறுபதில் பணி ஓய்வு பெறும் உயர்திரு சின்னத்தம்பிபவளகுமாரன் அவர்களது பணி வியந்து பாராட்டத்தக்கது.

அழிவ தூஉம் ஆவதூஉம் ஆகி வழி பயக்கும்
ஊதியமும் ஆழ்ந்து செயல்.

என்ற வள்ளுவனின் வாக்குக்கு ஏற்ப தனது அதிபர் வகிபாகத்தினைக் கட்டமைத்துக் கொண்டவர். அதிகாரத்தின்பால் நாட்டம் கொள்ளாது ஜனநாயக தலைமைத்துவப் பாங்கினை வகித்து கொண்டு மாணவர்கள் பெற்றோர், ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் என அனைவரினதும் நன்மதிப்பைப் பெற்ற பண்பாளனாக மணி விழா நாயகன் திகழ்கின்றார்.

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் மிக நீண்ட காலம் அதிபராக சிறப்புற கடமையாற்றியதுடன் தனது சேவையின் இறுதி அத்தியாயமாக யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தின் அதிபராக பல்வேறு சிக்கலான புறநிலைகளுக்கு மத்தியிலும் அப்பாடசாலையின் வெற்றிகரமான ஓர் அதிபராக வலம் வருகிறார்.

இவ்வாறாக இவரது கல்விப் பணிக்கான நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு, அவரது பணி ஓய்வுகாலம் சிறப்புடனும், தேகாரோக்கியத்துடனும், மகிழ்வுடனும் குடும்பத்தினருடன் நிறைவாழ்வு வாழ எல்லாம் வல்ல இறை நிலையைப் பிரார்த்திக்கின்றேன்.

**ந. காண்டீபன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



ஏறத்தாள 4 தசாப்தங்களாக விஞ்ஞான ஆசிரியராக, அதிபராக நிறைந்த கல்விப் பணியாற்றி அகவை அறுபதில் அரச பணியிலிருந்து ஓய்வு பெறுகின்ற, எம் போன்ற பல மாணவர்களின் விஞ்ஞானத் துறையிலான உயர்வுக்கு அடித்தளமிட்ட பெரும் மதிப்பிற்குரிய ஆசிரியர் உயர்திரு. சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

விஞ்ஞான எண்ணக்கருக்களை எளிய செயற்பாடுகளூடாகவும் நடைமுறை வாழ்வின் அனுபவங்களுடனும் தொடர்புபடுத்தி விளக்கும் பாங்கு மாணவர் பல்வகைமையை மதித்து கற்பித்தலை முன்னெடுக்கும் பாணி என்பன இவரிடம் கல்வி பயின்ற பல மாணவரின் உயர்விற்கு காரணமாயமைந்ததுடன் அவர்கள் தம் தொழில் வாழ்வில் மேன்மையுறவும் பேருதவியாயமைந்தது. ஆழ்ந்த தொழில் ஈடுபாடும், சமூகம் குறித்த புரிதலும், மாணவர் நலன் குறித்த கரிசனையுடனான பணிகளும் இவரது தொழில் மேன்மைக்கு பெரும் பங்காற்றியுள்துடன் துறைசார்ந்தோருக்கு வழிகாட்டலாகவும் அமைந்துள்ளன.

இவரது ஓய்வு காலத்தில் சகல வளமும். நல் ஆரோக்கியமும், அமைதியும் நிறைந்து நிலைத்திருக்க எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசியை வேண்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**செல்வி அ. நிருபராணி**

பிரதிக் கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்)

மாகாணக் கல்வித் திணைக்களம்

வடக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



அகவை அறுபது கண்டு ஓய்வு பெறும் யா/நாவற்குழி மகாவித்தியாலய அதிபரும் நண்பருமாகிய திரு.சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களின் கல்விப் பணியினை நயந்து வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மனமகிழ்வடைகின்றேன்.

கல்விப் புலத்திலே 37 வருடங்கள் தனது சேவையினை சிறப்பாக ஆற்றியமை மெச்சுதற்குரியது. தென் இலங்கையில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்து தென்மராட்சியில் சேவையினை தொடர்ந்து பிரதி அதிபராக, அதிபராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர். பல்வேறு சமூகபின்புலங்களை கொண்ட பாடசாலைகளை தன்னுடைய ஆளுமையினால் வெற்றிகரமாக முன்நகர்த்திச் சென்ற பெருமைக்குரியவர். பொறுமையும் தன்னடக்கமும், கருத்துக்களுக்கு மதிப்பளித்தலும் இவருடைய முகாமைத்துவத்தை வலுப்படுத்த உதவின. சமூக உறவாடலின் ஊடாக ஒன்றிணைத்து பல்வேறு பங்களிப்புக்களை பெற்று பௌதீகவிருத்திகளை மேற்கொண்டமை பாராட்டப்பட வேண்டியதாகும். பொறுப்பான தலைமைத்துவத்ினூடாக மாணவர் அடைவினை மேம்படுத்துவதில் அயராது பாடுபட்டவர். அன்னார் அகவை அறுபதில் பணியாற்றி ஓய்வு பெற்றாலும் ஓய்வு காலத்தில் குடும்பசகிதம் நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடனும் நிறைவான வாழ்க்கை வாழ இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

**திரு. வ. நடராசா,**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துச்செய்தி



*20.04.2022* அன்று தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து, மணிவிழாவினைக் கொண்டாடும், கைதடி மண் பெற்றெடுத்த தவப்புதல்வன் திரு சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

*16.04.1985* இல் ஆசிரியப்பணியில் காலடியெடுத்து வைத்து, பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகவும், பின் பிரதி அதிபர் மற்றும் அதிபராகவும் பரிணமித்து, அளப்பரிய கல்விப்பணியாற்றிவரும் அவரது சேவை மிகவும் போற்றுதற்குரியது.

“அன்னசத்திரம் ஆயிரம் வைப்பினும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி பெறும்” என்ற மகாகவி பாரதியாரின் சிந்தனைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து வரும் அவர் பணி மேலும் சிறக்கவும், அவர்தம் ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும், எல்லாம் வல்ல விநாயகப்பெருமானின் பாதாரவிந்தங்களை வணங்கி வாழ்த்துகின்றேன்.

வாழ்க வையகம். வாழ்க வளமுடன்.

**கு. பிரேமகாந்தன்,**
ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வட மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



"ஈஸ்வரனின் முழு ஆற்றல் மனிதத் தோற்றம்
எல்லோரும் அவனன்றி யார் வேறுள்ளார்?
ஈஸ்வரனே சீவர்களாய் இன்பம் துன்பம்
ஏற்கின்றான் இதையுணர்ந்து நலமே செய்வோம்"

என்ற ஞானக்களஞ்சிய கவிக்கமைவாக யா/ நாவற்குழி மகாவித்தியாலயத்தின் அதிபராக நற்பணியாற்றி ஓய்வுபெறும் அதிபர் திரு.சி.பவளகுமாரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளராக பணியாற்றிய காலத்தில் யா/கைதடி முத்துக்குமார சுவாமி வித்தியாலயத்தில் சமூகத்தவர்களுடன் நட்புறவு பேணி நிர்வாகத்தினருடன் இணைந்து நேர்மை தவறாது பணியினை சிறப்பாக மேற்கொண்டவர். முன்பள்ளியும் என்பள்ளியே என அரவணைத்து உற்சாகமூட்டியவர். தனது பணிக்காலத்தில் யாருக்கும் தீங்கிழைத்ததில்லை.

"ஒழுக்கமெனில் உயிர்க்கு இன்னா செய்யா நோன்பாம்
ஒருவர் பிறர்க் கோதனக்கோ, உடனோ, பின்னோ
வழுக்கியும் தீமை செய்யா உணர்வு அஃது
வாழ்வோர்க்கு இதற்குமேல் என்ன வேண்டும்"

என்று அழகாக சொல்கிறது வேதாந்திரியக் கவி 452.

நாம் ஒவ்வொருவரும் பிறந்த நாளிலிருந்து இன்றுவரை சமுதாயத்திற்கு கடன்பட்டிருக்கிறோம். இந்த சமுதாயக்கடனை நாம் வாழுங்காலத்திலேயே தீர்த்துவிட வேண்டும். கல்விப்பணி செய்வோருக்கு இறைநிலை சமுதாயக் கடன் தீர்க்க அரிய வாய்ப்பினைத் தந்துள்ளது. அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி நாம் எமக்கு இறைநிலையால் ஒப்படைக்கப்பட்ட அத்தனை குழந்தைகளும் எழுத்தறிவு, தொழிலறிவு, இயற்கை பற்றிய அறிவு, ஒழுக்க பழக்க அறிவு முழுமையாகப் பெற்று உயர்வடையப் பணியாற்ற வேண்டும். இதுவே இறையன்பு - இதுவே அறநெறி வாழ்வு.

"விளைவு இலா வினையில்லை; வினையி னூடே
விளைவுபல தொக்கிநிற்கும் இயற்கை நீதி
விளைவுக்கும் வினைக்குமிடை காலநீளம்,
விளைவுதூரம் இவை வினையின் தன்மை ஒக்கும்"



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எந்தவொரு செயலுக்கும் விளைவு உண்டு. இது இறைநீதியாகும். எனவே நாம் ஆற்ற வேண்டிய பணிகளை உரிய காலத்தில் நிறைவாக ஆற்றி நல்ல விளைவினை பெற வேண்டும்.

"செயலிலே விளைவாகத் தெய்வ ஒழுங்கமைப்பிருக்கப்
பயனென்ன தவறிழைத்தும் பரமனைப் பின் வேண்டுவதால்"

திரு. சி.பவளகுமாரன் அவர்கள் தன் பணிக்காலத்தில் நற்பணியாற்றி மனநிறைவோடு ஓய்வு பெறுகின்றார். ஓய்வு காலத்திலும் சமுதாயப்பணி தொடர வாழ்த்துகின்றேன்.

உருவாகி உடல்வளர்ந்து வாழ்கின் றேன் என்
உடலை வளர்த்து அறிவூட்டி வாழ்வதற்கென்னை
ஒரு மனிதனாக்கி வைத்தும், இன்றும் கூட
உணவு உடை, மற்றும் பல வசதி எல்லாம்
தருகின்ற மனித இனம் தனக்கு என் சக்தி
தக்கபடி பயன்படுத்துகின்றேன், என்ற
பெருநோக்குச் செய்கையே, நிஷ்காம்ய கர்மப்
பேறறமாம், மனிதனுடைய கடமை ஈதே"

நீங்களும் உங்கள் அன்புக் குடும்பமும் வாழ்க வளமுடன். தொண்டாற்றி இன்பம் காண்போம். வாழ்க வளமுடன்.

திருமதி அ.வேதநாயகம்,
ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



ஒரு மனிதனின் வாழ்க்கைப் பயணத்தில் ஒரு மைல்கல் பணிநிறைவு நயப்பு விழாவாகும். அந்த வகையில் யா/நாவற்குழி மகா வித்தியாலத்தில் அதிபராகப் பணிபுரிந்து அகவை அறுபதில் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறும் திரு.சி.பவளகுமாரன் அவர்களின் மணிவிழா நிகழ்ச்சிகளையொட்டி வெளியிடப்படவிருக்கும் விசேட பணிநிறைவு நயப்பு விழா மலருக்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஆசிரியத் தொழிலில் 16.04.1985 இல் தம்மை இணைத்துக் கொண்ட இவர் களுத்துறை மத்துகம சாந்தமேரி மகாவித்தியாலம், யா/நாவற்குழி மகாவித்தியாலயம், யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஒரு ஆசிரியராகவும் அதன் பின் அதிபர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து 01.01.2002 இலிருந்து அதிபர் சேவை 2II இல் இணைந்து 2003 - 2006 வரை யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராகவும் 2006ம் ஆண்டிலிருந்து 2015ம் ஆண்டு வரை யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் அதிபராகவும் 2015ம் ஆண்டிலிருந்து இன்றுவரை யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தில் அதிபராகவும் பணியாற்றி வருகின்றார்.

நான் தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்த காலத்தில் யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தில் இவருடன் இணைந்து கல்விப் புலம், நலன்புரிப் பணிகள், பௌதீக வளம் சார்ந்து பல அபிவிருத்தி பணிகளை சுமுகமாக மேற்கொள்ள முடிந்தது.

குறிப்பாக மாணவரின் ஆங்கில அடைவு மட்டத்தினை மேம்படுத்தவும், மாணவர்கள் கவிநிலையான சூழலில் ஆங்கில பாடத்தினைக் கற்பதற்காகவும் உலக தரிசன நிறுவனத்தின் [World vision - Lanka] பௌதீக வள உதவியுடனும் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் நிதிப் பங்களிப்புடனும் ஆங்கில செயற்பாட்டறை அமைக்கப்பட்டமை. மேலும் ஆரம்பப்பிரிவு மாணவர்களது கல்விச் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்காகவும் அவர்களுக்கு நீண்ட காலமாக நிலவி வந்த வகுப்பறைப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவும் ஏற்கெனவே இருந்த பொருத்தமற்ற வகுப்பறைகளை அகற்றி இந்திய குடியரசின் உதவியுடன் 110' X 25' மாடிக்கட்டடமும் மீள் குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் உதவியுடன் 50' X 25' கட்டடமும் அமைக்கப்பட்டமை. மேலும் மாணவர்களது அடிப்படை சுகாதார வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு உலக தரிசன நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் ஆசிரியர் மற்றும் மாணவருக்கான



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலசலகூட தொகுதிகளை அமைத்தமை. மேலும் மாணவர்களது இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள், பாடசாலை நிகழ்வுகளை நடாத்தக் கூடிய வகையில் கந்தையா கனகம்மா நிதியத்தின் நிதி அனுசரணையுடன் 100' X 30' பிரார்த்தனை மண்டபம் அமைக்கப்பட்டமை போன்ற செயற்பாடுகளை திட்டமிட்ட வகையில் நிறைவேற்றுவதில் திரு.சி.பவளகுமாரன் அவர்களது பங்களிப்பையும் அவருக்கு சமூகத்துடன் இருந்த நேர்மனப்பாங்கான தொடர்பாடலையும் இங்கு நினைவு கூரல் சாலச் சிறந்தது ஆகும்.

ஒருவரது சேவையின் பயனை அவரது பிள்ளைகளின் உயர்வில் காணலாம். இவரது பிள்ளைகள் நல்ல உயர்நிலை பெற்று கல்வியிலும் பண்பிலும் சிறப்புற்றிருப்பது அவரது தன்னலமற்ற சேவைக்குக் கிடைக்கப்பெற்ற வெகுமதியாகக் கொள்ளப்படலாம்.

இவரது இளைப்பாறுகைக் காலத்தில் இவர் உடல் ஆரோக்கியத்தோடும் மிகுந்த மனநிறைவுடனும் நீண்ட ஆயுளுடனும் மகிழ்வாக இருப்பதற்கு வாழ்த்துவதோடு அவரது பணிநிறைவு நயப்பு விழா சிறப்புறவும் மலர் வெளியீடு இனிதே நடைபெறவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார்**

(மேனாள் வலயக் கல்விப் பணிப்பாளர்)

தென்மராட்சிக் கல்வி வலயம்

மற்றும்

இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர்

(MHO - USA)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பன்முக ஆளுமைகளுக்கு சொந்தக்காரன் திரு.சி.பவளகுமாரன்



அதிபர் திரு.சி.பவளகுமாரன் அவர்களது மணிவிழா மலரில் எனது கருத்துக்களையும் உள்வாங்க திட்டமிட்டிருப்பதாகவும், எனவே என் நினைவுகளில் சேமிக்கப்பட்டிருக்கும் அதிபர் திரு.சி.பவளகுமாரன் அவர்கள் தொடர்பான தகவல்களில் சிலவற்றை எழுத்துருவில் தொகுத்து தருமாறும் வேண்டிய ஒரு கடிதம், பலரது கைகளுக்கு மாறி, ஒரு மாலைப் பொழுதில் என்னிடம் வந்து சேர்ந்தது. மகிழ்ச்சியோடு அதனை ஏற்றுக் கொண்டேன்.

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும், வலயக்கல்விப் பணிப்பாளராகவும் நான் கடமையாற்றிய காலங்களில், யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலத்திலும் அதன் பின்னர் யா/நாவற்குழி மகாவித்தியாலயத்திலும் அதிபராக கடமை புரிந்து தன் தனித்துவ ஆளுமையால் இப்பாடசாலைகளை திறம்பட இயக்கிய மனித நேயம் மிக்க ஆளுமையாளனாக திரு. சி.பவளகுமாரன் அவர்களை நான் அடையாளம் கண்டுள்ளேன்.

பல்வேறுபட்ட புறக்காரணிகளின் கருத்துக்களின் மத்தியில், தரம் ஒன்று தொடக்கம் தரம் பதின் மூன்று வரையிலான சுமார் ஆயிரம் மாணவர்களையும், ஐம்பது வரையிலான ஆசிரியர்களையும் கொண்ட ஒரு பாடசாலையினை நிர்வகிப்பது என்பது இலகுவான ஒரு விடயமல்ல. அரசியல் சார் நிவர்த்தி நிரல்கள், நிர்வாகம் சார் அதிகாரங்கள் என்பன ஒரு பக்கத்திலும் சிறுவர்கள், மாணவர்களது உரிமைகளை உரிமைகள் என்ற குடைகளின் கீழ் இருந்தபடி நேர்கொண்ட பார்வையோடு நிற்பவர்கள் ஒரு பக்கமாகவும் நின்று இழுக்கும் கயிறு இழுத்தல் நிகழ்வில் சிக்கிக் கொண்ட துணித்துண்டைப் போல அதிபர் பதவியில் இருப்பவர்கள் படும் சிரமத்தை வார்த்தைகளில் இலகுவாக அடக்கிவிட முடியாது. இருந்தும் அந்த நெருப்பாற்றை நீந்திக் கடந்து தன் பணி முடிந்தவராக திரு. சி.பவளகுமாரன் அவர்களை கண்டு நான் மகிழ்ந்திருக்கின்றேன். வியந்திருக்கின்றேன்.

மொழி என்பது இன்று அரசியலாகிவிட்ட சூழலில் தாய்மொழியைப் பேணுவதை மறக்கவும், மறுக்கவும் தூண்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு நிலையில், தாய் மொழியைப் பேண மறப்பவன் அடிமைப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு யதார்த்த நிலையில், தனது தொடர்பாடலில், உரையாடலில் பெரும்பாலும் தமிழ்ச் சொற்களையே முழுமையாகப்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தும் ஒரு மொழிப்பற்றாளனாக திரு.சி.பவளகுமாரன் அவர்களை கண்டு இன்புற்றிருக்கின்றேன்.

"சாட்சிகள் இல்லாத இடத்திலும் நேர்மையால் இருப்பதே ஒழுக்கம்" என்றார்கள் எம் முன்னோர்கள். வள்ளுவன் கூற்றுப்படி உயிரினும் மேலான ஒழுக்கம் என்பது இன்று இடம், காலம், பதவி என்பவற்றிற்கு ஏற்ப தரமிழந்து ஒவ்வொருவரும் வழங்கும் தன்னிலை விளக்கத்தால் கொவிட் - 19 வைரஸ்சைப் போல அடிக்கடி உருமாறி, பொருள்மாறி நிற்கும் காலத்தில், "வாழ்க்கை என்பது நிரூபிப்பதற்கான களம் என வாழ்ந்து காட்டியவர் எமது அதிபர் திரு.சி.பவளகுமாரன் அவர்கள்.

வாழ்தலின் சிறப்பான அடையாளங்களை தொலைத்துவிட்டு, வாழ்ந்து முடிப்போர் மத்தியில், மண்ணையும், மாணவர்களையும் நேசித்த, யோசித்த ஒரு சேவையாளனாக என் மனப்பதிவில் திரு.பவளகுமாரன் அவர்கள் பதியப்பட்டிருக்கின்றார். அந்த உயரிய பதிவினை தினமும் வலிமைப்படுத்திய வண்ணம், மணிவிழாக்காணும் நாயகனை வாழ்த்தி, இறை அருள் என்றும் கிடைக்க வணங்கி நிற்கின்றேன்.

**திரு.க.சுந்தரசிவம்**
வலயக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)
(தென்மராட்சி / தீவகம் / வலிகாமம் வலயங்கள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த அதிபர்



*திரு.சி.பவளகுமாரன் அவர்கள் கைதடிக் கிராமத்தில் சின்னத்தம்பி தங்கம்மா தம்பதியினருக்கு கனிஷ்ட புதல்வனாக 20.04.1962இல் பிறந்தவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/கைதடி முத்தக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்திலும், பின்னர் விஞ்ஞான பாடத்தில பயிற்றப்பட்ட ஆசிரியராகி, கல்விமாணிப்பட்டமும் பெற்றார்.*

இவர் யா/நாவற்குழி மகா வித்தியாலத்தில் ஆசிரியராகக் கடமையாற்றியபோது யான் அறிவேன். யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தில், நான் 01.02.1993ஆந் திகதி தொடக்கம் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் இவர் பாடவிதான, இணைபாடவிதான செயற்பாடுகளில் வினைத்திறனுடன் பங்கு கொண்டார். இதனால் பாடசாலை முகாமைத்துவத்தில் பகுதித் தலைவராக நியமனம் பெற்றார். தொடர்ந்து இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபரானார். நல்ல ஆசிரியர்கள் அதிபர்களாக வருவதே அதிபர் சேவைக்கு மாண்பைக் கொடுக்கும் என்பார்கள். அந்தவகையில் அதிபர் சேவையின் தரத்தை உயர்த்தினார் என்பது மிகையல்ல.

2000ம் ஆண்டு ஏற்பட்ட இடப் பெயர்வினால் பாடசாலைகளின் கட்டமைப்பு பாதிக்கப்பட்டிருந்த நிலையில் பவளகுமாரன் யா/கைதடி முத்தக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்திற்கு 2002இல் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டார். யா/ நாவற்குழி மகா வித்தியாலயத்தில் பத்து வருடங்களை நிறைவு செய்த யான் முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தற்கு அதிபராக நியமிக்கப்பட்டேன். நாம் இருவரும் இணைந்து இப்பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டோம். பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்திக்காக பல செயல்திட்டங்களை நிறைவேற்றினோம். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஒருவர், இருவர் சித்தி என்ற நிலையை மாற்றி பலரை சித்தியடைய வைத்தோம். க.பொ.த (சா.த)ப் பரீட்சையில் கணித பாட சித்தி வீதத்தை அதிகரிக்கச் செய்தோம். 21.06.2006 இலிருந்து இவரே பாடசாலையின் அதிபராகி அலுவலக முகாமைத்துவம் தொடக்கம் பல மாற்றங்களைக் கொண்டு வந்து ஒன்பது வருடங்களாக அரும்பணியாற்றினார். பின்னர் 2015இல் யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தின் அதிபர் பொறுப்பை ஏற்றார். இவரது காலத்திலேயே மாணவர்களின் வகுப்பறைத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் பாரிய இரு மாடிக் கட்டிடம் கட்டமைக்கப்பட்டது. கந்தையா கனகம்மா நிதியம் பிரர்த்தனை மண்டபம் ஒன்றை அமைத்துக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. இன்று இப்பாடசாலை வருடாவருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல மாணவர்களை பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தம்பி பவளகுமாரன் இலங்கை அதிபர் சேவை தரம் - I 14 வருடங்களை நிறைவு செய்து தென்மராட்சி கல்வி வலயத்தில் சிரேஷ்ட அதிபராக திகழுகின்றார். இவர் மிக அமைதியானவர். ஆழுமைமிக்கவர். "சரியான விடயங்களை செய்பவரே தலைவர்"என்பார். பிரபல முகாமைத்துவ சிந்தனையாளர் பீட்டார் F.டரக்கர். இவரும் அவ்வாறே ஆராய்ந்தே சரியான விடயங்களை செய்வார். ஓர் சிறந்த தலைவர் என்பதற்கு இவரால் வழிநடாத்தப்படும் பாடசாலையும், குடும்பமுமே சுட்டிகளாகும். அந்த வகையில் இவர் ஓய்வின் பின்னரும் தனது குடும்ப, சமூக வாழ்விலும் ஏற்றம் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு.பி.முத்துலிங்கம்**

ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்,

தென்மராட்சிக் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌதீகவள அபிவிருத்திச் செயற்பாடுகள்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



திரு.சி.பவளகுமாரனின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்சியடைகின்றேன்.

திரு.பவளகுமாரன் அவர்கள் எனது ஊரவன் என்னோடு கடமையாற்றியவர். நீண்ட நாட்களாகத் தெரிந்த ஒருவர். அமைதியானவர். எந்த பிரச்சினைகளையும் புன்சிரிப்புடன் எதிர்கொள்ளும் பக்குவம் உடையவர். சிறந்த ஆசிரியர். கற்பித்தலில் ஈடுபாடு கொண்ட சிறந்த ஆசிரியனே எனது அனுபவத்தில் சிறந்த அதிபராக விளங்க முடியும் திரு.பவளகுமாரனின் சிறந்த ஆளுமைக்கு அவர் சிறந்த ஆசிரியராக இருந்தமையே காரணம் என்பது எனது கணிப்பு.

திரு.பவளகுமாரன் ஆசிரியராக அதிபராக முப்பத்தேழு ஆண்டுகள் கல்வியுலகில் நிலைத்து நின்றமை அவரது திறமையின் வெளிப்பாடாகும்.

"தக்கவர் என்பது அவரது பிள்ளைகளின் வளர்ச்சியைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்" என்பதற்கிணங்க அவர் தம் பிள்ளைகள் பெற்றோர் புகழ் விளங்கும் வண்ணம் கல்வி கேள்விகளில் உயர்வு பெற்று நன்மக்களாகச் சிறந்து விளங்குகின்றனர்.

ஏனையோருக்கு முன்னுதாரணமாக விளங்கும் திரு.சி.பவளகுமாரன் ஓய்வு காலத்தில் எல்லா நலனும் பெற்று குடும்பத்துடன் இன்புற்று வாழவும் சமய சமூகப்பணிகளில் பங்களிப்புச் செய்யவும் இறையாசி கிடைக்க வேண்டுமென வாழ்த்துக்கூறி அமைகின்றேன்.

**நா.சத்தியநாதன்**

B.A. (Cay), Dip. in. Ed, P.G.D.E.M, M.Ed. LL.B. Attony at Law



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



சமூகத்தின் சிறப்பான வளர்ச்சிக்கு மிக உன்னதமான பணிகளை ஆற்றிவரும் பாடசாலைகள் எமது சமூகத்தின் மணிமகுடங்களாக விளங்குகின்றன. அத்தகைய பாடசாலைச் செயற்பாடுகளை மிகவும் வினைத்திறனாகச் சிறப்பான முறையில் வழிநடத்திப் பாடசாலைக்குப் பெருமையைத் தேடித்தரும் அதிபர்கள் வரிசையில் திரு.சி.பவளகுமாரன் அவர்களும் சிறப்பிட்டுக் கூறக்கூடியவர். 1985ம் ஆண்டில் தனது முதல் ஆசிரிய நியமனத்தைப் பெற்ற இவர் 17 வருடங்கள் ஆசிரியர் சேவையிலும் 20 வருடங்கள் அதிபர் சேவையிலும் அமர்ந்து மிக அரிய பணியாற்றியுள்ளார். 01.01.2002ல் அதிபர் நியமனத்தைப் பெற்ற இவர் 2006 - 2015 வரை யா/கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்திலும் 2015ல் இருந்து இற்றைவரை யா/நாவற்குழி மகாவித்தியாலயத்திலும் அதிபர் சேவையைத் திறம்பட ஆற்றியுள்ளார். இவரின் காலத்தில் பாடசாலையின் வளர்ச்சி மிகவும் சிறப்பாக அமைந்தது. ஆசிரியர்களையும் மாணவர்களையும் தனது மதிநுட்பத்தினால் மிகவும் லாவகமாகக் கையாளும் திறமை படைத்தவர். பாடசாலையின் ஒவ்வொரு வளர்ச்சிப்படி நிலையிலும் இவரின் பங்களிப்பு அதிகமுண்டு.

மாணவர்களின் கல்வியில் அதிக அக்கறையுடையவர். அவர்களின் முன்னேற்றம் தொடர்பாகப் பெற்றோர்களுடன் அடிக்கடி தொடர்பைப் பேணி வருபவர். சமூக நலனில் அதிக அக்கறையுடையவர். ஆசிரியர்கள் மத்தியில் எவ்வித வேறுபாடுகளும் இல்லாதவர். இதனைவிடப் பொதுச் சேவைகளிலும் அதிக ஈடுபாடு கொண்டவர். கைதடி வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையில் பொருளாளராக / உப தலைவராகப் பணியாற்றி வருபவர். அத்துடன் கைதடி லயன்ஸ் கழக அங்கத்தவராகவும், கைதடி பொதுநூலக அபிவிருத்தி சங்க உறுப்பினராகவும் கடமை புரிந்து வருகின்றார். தனது கடமைகளைச் சிறப்பாக ஆற்றி வரும் பவளகுமாரன் அவர்களை நான் நன்கறிவேன். ஒரு அதிபராகப் பன்முகப் பார்வை கொண்டவர். மாணவர்களின் குடும்ப நிலையைக் கூட நன்கறிந்து உதவும் மனம் படைத்த ஒரு உத்தம அதிபர். இவருடைய காலத்தில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளும் சிறப்பாக அமைந்திருந்தன. மாணவர்களின் சகல செயற்பாடுகளிலும் அக்கறையுடன் செயற்படுபவர். கல்வி நடவடிக்கைகளில் மட்டுமல்லாமல் இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் மாணவர்களை ஈடுபட வைத்து அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார்.

மிகவும் அன்பாகவும், பண்பாகவும் அடக்கமாகவும் கருமமே கண்ணாகவும் துடிப்பான சேவையாற்றி ஓய்வு பெறும் பவளகுமாரன் அவர்களின் மணிவிழா சிறக்கவும். எதிர்காலம் சுபீட்சம் பெறவும் அவரை வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கின்றேன். அவரது ஓய்வு காலமும் கல்விப்பணி புரியும் ஒரு உன்னதமான சேவையில் மனமும் உடலும் ஒன்றுபட்டு செயற்பட இறைவனை வேண்டுகின்றேன். வாழ்க அவர்பணி.

**கலாநிதி (திருமதி) ஜெயலக்சுமி இராசநாயகம்**
தலைவர் / கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தரணி செதுக்கும் சிற்பி



அன்பறிவு ஞான அறம்
அத்தனையும் கொண்டு
என்புருகக் கதை பேசி
அறிவூட்டும் ஆசான்
நன்று துணை நல்குமீசன்
நின்றருளும் கைதடியோன்
ஈன்றளித்த கல்விப்பணி
என்றுமுள தெம்மகத்தில்

ஆசானாய் அதிபராய் என்றும்
உயர் சமூக சேவகனாய்
வாச மலராய் வையம் சிறக்க
வாய்த்தவனே வாழ்க நீ
விஞ்ஞானம் தந்த வித்தகனே
வாழ்த்துக்கள் அரிய சேவைக்கு
எஞ்ஞான்றும் எல்லாம் பெற்று நீர்
அமைதியாய் வாழ்க வாழ்கவே

தகமை குன்றாத் திறமையினால்
தரணி செதுக்கும் சிற்பியாய்
அகவை ஓய்வு ஆன போதும்
உலகு செதுக்க எழுந்திடுவாய்
மன்னுமுலகின் மேன்மைக்கு
என்றுமுழைத்த ஆசானாம்
சின்னத்தம்பி பவளகுமாரன்
சீருடன் வாழ்க வாழ்கவே

சிரேஷ்ட பேராசிரியர்
**தி.வேல்நம்பி**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



யா/ நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திரு.சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்கள் தமது ஆசிரிய அதிபருக்குரிய கடமைகளைப் பூர்த்தி செய்து 19.04.2022 அன்று ஓய்வு பெற இருப்பதையொட்டி எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எனது ஆசிரியப்பணியும் திரு.பவளகுமார் அவர்களது ஆசிரியப்பணியும் நாவற்குழி மகா வித்தியாலத்தில் ஒரே காலப்பகுதியில் (1993 - 1999) நடைபெற்றது. மிகவும் சந்தோஷமானதும் பல்வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட காலமாகவும் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத சவால்கள் உயிர்களிற்கு அச்சுறுத்தல்கள் நிறைந்த காலமாகவும் அன்று காணப்பட்டன. இவற்றிற்கு மத்தியில் நாங்கள் உயிர் நண்பர்களாக இணைந்து அவர் விஞ்ஞான பாடத்தையும் நான் ஆங்கில மொழியையும் மிகவும் கஷ்டப்பட்ட மாணவர்களிற்கு கற்பிப்பதில் எம்மாலான முயற்சிகளை மேற்கொண்டோம். அன்றில் இருந்து எமது நட்பு வளர்ந்தது.

திரு.சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்கள் பின்பு யா/கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயத்திலும் அடுத்து யா/நாவற்குழி மகாவித்தியாலயத்திலும் அதிபராக கடமையாற்றி சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். நான் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் இருந்து 1999ம் ஆண்டு பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலைக்கு விரிவுரையாளராக நியமிக்கப்பட்டதன் பின்பு எமது நேரடித்தொடர்புகள் குறைந்தன. நான் 2000ம் ஆண்டளவில் யாழ்பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி போதனா நிலையத்தில் விரிவுரையாளராக தெரிவு செய்யப்பட்டேன். நானும் திரு.பவளகுமார் அவர்களும் பலாலி ஆசிரியப்பயிற்சி கலாசாலையில் இரண்டு வருடங்கள் ஆசிரிய பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்ததுடன் மிகவும் திறமையான விரிவுரையாளர்களின் கீழ் நெறிப்படுத்தப்பட்டவர்கள். பல்வேறு சவால்களிற்கு மத்தியில் திரு.பவளகுமார் அவர்கள் தனது ஒப்பற்ற தன்னலமற்ற அதிபர் சேவையை யா/நாவற்குழி மகா வித்தியாலயத்திற்கு வழங்கியதை நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் கண்டு பூரிப்படைந்தேன். நாவற்குழி மகாவித்தியாலயத்தின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அதிபர் பவளகுமார் அவர்களின் பணி நிகரற்றது. விளையாட்டு மைதானம் பார்வையாளர் கூடம் என்பற்றைத் திறம்பட புனர்நிர்மாணம் செய்து மாணவர்களின் பாவனைக்காக வழங்கியமை பாராட்டத்தக்கது. தென்மராட்சிக் கல்வி வலயத்தில் ஓர் வினைத்திறன் மிக்க அதிபராகப் பணியாற்றி தனது கல்வி நிர்வாகச் சேவையை இனிதே பூர்த்தி செய்யும் திரு.சி.பவளகுமாரன் அவர்களிற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். அவரது ஓய்வின் பின்னான காலப்பகுதியில் குடும்பத்தினருடன் சகல வளங்களும் பெற்று ஆரோக்கியத்துடன் வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை இறைஞ்சி எனது வாழ்த்துச் செய்தியினை நிறைவு செய்கின்றேன்.

**திரு. வன்னியசிங்கம் பரந்தாமன்**
B.A(Hons) MA(Hng) MA(TESL) M.Phil (Ling)
சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கில மொழிப் போதனைத் துறை
யாழ் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கற்பித்தல் என்பது தான் கற்றவற்றையும் தனக்குத் தெரிந்த தகவல்களையும் மாணவர்களுக்குக் கடத்தும் வெற்றுச் செயலல்ல. மாறாக மாணவர்களின் வாழ்க்கைக்கு உதவும் வகையில் அறிவையும், மனப்பாங்கையும் திறமையையும் வளர்ப்பதே ஒரு ஆசிரியரின் கடமையாகும். அந்த வகையிலே தான் சார்ந்த பாடசாலைகளிலும் மாணவர்களிலும் அக்கறையும் அன்பும் கொண்டு முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் நின்ற ஆசிரியப் பணிபுரிந்தவர் அதிபர் திரு. பவளகுமாரன் அவர்கள்.

திரு பவளகுமாரன் அவர்களின் குடும்பத்தை எனக்கு நீண்ட காலமாகத் தெரியும் எமது ஊரிலே - கைதடியில் கண்ணியமான சேவை மனப்பாங்கு கொண்ட குடும்பமது. நான் ஊரில் வாழ்ந்த காலத்தில் பவளகுமார் ஒரு சிறுவன். பின்னர் அவர் கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் உப அதிபராகவும் அதிபராகவும் பணிபுரிந்த காலத்திலேயே அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த நட்பும் மதிப்பும் இன்றுவரை தொடர்கிறது மொத்தத்தில் இவர் ஒரு நல்ல மனிதர் என்பது எனது கணிப்பு.

நல்லாசிரியர்களுக்கு பவளகுமாரன் ஒரு முன்மாதிரியானவர். சிறந்த ஆளுமைப்பண்பு கொண்டவர். சுயசிந்தனை மற்றும் ஆக்கத்திறன் மிக்கவர். மாணவர்களினதும் பெற்றோர்களினதும் உணர்வுகளைப் புரிந்துகொண்டு செய்யும் பணிக்கு தன்னை அர்ப்பணிப்பவர். அதை அவர் வெறுமனே தொழிலாகப் பார்க்கவில்லை. மாறாக பெற்றோர்களுடனும் ஊரவர்களுடனும் சுமூகமாகப் பழகி நெருக்கமான உறவுகளைக் கொண்டிருப்பவர். இப்பண்புகள் இயல்பாகவே அவரது குடும்பத்திலிருந்து கடத்தப்பட்டிருக்கலாம் என நான் நினைப்பதுமுண்டு.

ஊருக்கு உபதேசம் உனக்கில்லை என்று இவர் வாழ்ந்தவரல்ல. முடிந்தவரை இவரது பிள்ளைகள் ஊர்ப்பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். இப்பொழுது இவர்கள் டாக்டர்களாகவும் என்ஜினியராகவும் வருவதற்கான கல்வியைக் கற்கிறார்கள். இவரது இளைய மகள் பத்தாம் வகுப்பு வரை ஊர்ப்பள்ளிக்கூடத்தில் படித்து பின்னர் அதிதிறமைச் சித்திகள் பெற்று மெறிற் அடிப்படையில் மொறட்டுவ பல்கலைக்கழகத்துக்கு பொறியியல் படிக்கச் சென்றவர் என்பதை நான் அறிவேன். இது இவரது நேர்மைக்கும் சேவைக்கும் ஆண்டவன் கொடுத்த பரிசு என்பது என் அனுமானம்.

திரு.பவளகுமாரன் அரச அதிபர் பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார் என்பது கவலை தருகிறது. அவர் தொடர்ந்து அரசு சார்பற்ற வகையில் பணிபுரிய வேண்டும். சமூகம் அவரிடமிருந்து இன்னும் நிறைய எதிர்பார்க்கிறது. அதற்கமைய வலுவையும் பலத்தையும் நலத்தையும் அவர் பெறவேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் ஆ.சி.கந்தராஜா,**

சிட்னி. அவுஸ்ரேலியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப்புலத்தின் மாபெரும் ஆளுமை



எனது அன்புக்குரிய மாணவன் திரு சி.பவளகுமாரன் அவர்களுக்கு, மணிவிழா வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எல்லோராலும் மதிக்கப்படும் திரு பவளகுமாரன் அவர்கள் அன்பு, பரிவு, சகிப்புத்தன்மை, மற்றவர்களை மதித்தல், சமூக நோக்கு போன்ற நற்குணங்களைத் தன்னகத்தே கொண்டு கல்விச் சமூகத்தை வழி நடத்திய பெரும் ஆளுமையாக திகழ்கின்றார்.

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணிக் கற்கை நெறியில் எனது மாணவனாக மூன்று ஆண்டுகள் இருந்துள்ளார். அவர் என்னிடம் கற்றுக்கொண்ட விடயங்களை விட அவரிடமிருந்து நான் கற்றுக்கொண்ட விடயங்கள் ஏராளமாகும்.

திரு.பவளகுமாரன் அவர்கள் இருபது ஆண்டுகளாக பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றிய காலம் பொற்காலமாக அமைகிறது. இக் காலப்பகுதியில் பல ஆயிரம் நன் மாணாக்கரை சிறந்த முறையில் பயிற்றுவித்து சமூகத்திற்கு வழங்கியுள்ளார். இக் காலப்பகுதியில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சிறந்த முன்னுதாரண புருஷராக திகழ்ந்துள்ளார். தனது பாடசாலைக்கு வருகை தரும் ஒவ்வொருவரையும் சிறந்த முறையில் வரவேற்று, உபசரித்து அனுப்புகின்ற மிகச்சிறந்த பண்பாட்டை அவர் பேணி வந்துள்ளார்.

"ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்ற கூற்றிற்கு இணங்க சமூகத்திற்கு அவர் ஆற்றிய பிரதிபலன்களை அபரது பிள்ளைகளின் உயர்ச்சியில் பார்க்க முடிகின்றது. அவரது மூன்று பிள்ளைகளும் கல்வியில் அதி உயர் நிலையை அடைந்திருக்கின்றார்கள்.

பவளகுமாரனின் செயற்பாடுகளும் பவளம்போல் பிரகாசிக்கின்றது. தன்னைச் சுற்றி இருப்பவர்களை மகிழ்ச்சிப்படுத்தி வைத்திருப்பதில் வல்லவராய் இருக்கிறார். கல்வித் தலைவர் என்ற வகையில் முகாமைத்துவ நடிபங்குகளை திறம்பட செயற்படுத்திஉள்ளார் காலத்திற்கு முந்திய ஓய்வில் அவர் சென்றாலும் தொடர்ந்தும் சமூகத்திற்கு அவரது சேவைகள் தேவையாக உள்ளன. அவர் சிறந்த முறைமையில் கடமைகளை மேற்கொள்ளவும் உடல், உள ஆரோக்கியத்துடனும், நீண்ட ஆயுளுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் மணிவிழா நாளில் மனமகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

**S.R.சத்தியேந்திரம்பிள்ளை விரிவுரையாளர்**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி

இணைப்பாளர் தேசிய கல்வியற் நிறுவகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



அறுபது வயதினை பூர்த்தி செய்து இன்று மணிவிழாக் காணும் அதிபர் திரு.சி.பவளகுமாரன் அவர்களிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்

"நீதி தவறாதபடி பாகமியற்றிப்
பேடிப் பதர்களை விலக்கிப் - பொதுப்
பெரும் பயன் கருதித் தஞ் சிறு பயனை
வேடிக்கை போலுதறித்தள்ளிப் - பொது
வெற்றியினை நாடுபவர் மேன்மை பெறுவர்"

என்ற மகாகவியின் பாடலடிகளுக்குப் பொருத்தமானவராக, நீர்வளமும், நிலவளமும், கலைவளமும் நிறைந்த கைதடி ஊரிலே பிறந்து, கல்வியிலே சிறந்து ஆசிரியராக நியமனம் பெற்று, சேவையின் சிறப்பின் பயனாக அதிபராக கடமையாற்றி தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திரு.சி.பவளகுமாரன் அவர்களுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன் கண்விடல்"

என்ற வள்ளுவரின் பொய்யா மொழிக்கமைய கடமையைக் கடமையாகவே கழிப்பவர் மத்தியில் தன் கடமையை உரிமையாகக் கொண்டு அதில் உண்மையான வெற்றியைக் காண்பவராக விளங்கினார். ஒரு கல்விச் சேவையாளனின் சேவை எப்போது தொடங்கியது? எப்போது முடிகின்றது என்பது முக்கியமல்ல. அவர் தனது சேவைக்காலத்தில் தனது அர்ப்பணிப்பான சேவையால் எத்தனை மனங்களில் நிறைந்திருக்கிறார் என்பதனை வெளிப்படுத்துவதே முக்கியமானதாகும். அதிபர் அவர்கள் ஓர் ஆசிரியராகவும், அதிபராகவும் விளங்கி தன் பணியினை செவ்வனே நல்கி பல்வேறு பரிமாணங்களை தோற்றுவித்து சமூகப்பணிகளாலும், அறப் பணிகளாலும் தன்னை ஈடுபடுத்தி சேவையாற்றியவர் என்றால் மிகையல்ல. ஆசிரியர்களிடையே மிதமான ஒற்றுமையினையும், நாம் எல்லோரும் ஓர் குடும்பம் என்ற எண்ணமும் கொண்டு விளங்கியதுடன் மாணவனின் கல்வியில் வெவ்வேறு ஆற்றல்களையும் உச்சிக்கு கொண்டு செல்வோம் என்ற திட சங்கற்பத்தையும் ஏற்படுத்தக் காரணமாக இருந்தவர்.

நிமிர்ந்த நடை, வசீகரமான முகத்தோற்றம், எந்நேரமும் புன்சிரிப்பு, ஆழமான கல்விச்சிந்தனை, தூர நோக்கு இவையனைத்தும் அவரது வெற்றிக்கு அடித்தளமாக அமைந்தன. அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் இவரது பணிகள் தொடர வேண்டும் பெற்ற பட்டறிவு எமது இளைய சந்ததியினருக்கும் உரமாக அமைய வேண்டும். இவரது நல்வாழ்வுக்கும், நற்பணிகளுக்கும், குடும்பத்தின் நலத்துக்கும் இணுங்கித்தோட்ட முருகனின் அருளை நாடி நிற்கிறேன்.

**திரு.செ.பேரின்பநாதன்**

தலைவர், அதிபர் சங்கம், தென்மராட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவளமாக மிளிர்ந்த அதிபர்



பல கல்வியலாளர்களை உருவாக்கிய பெருமை சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு உண்டு. சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்கள் கல்விப் புலத்தில் ஏற்படுத்திய தாக்கம் அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் கல்விச்சேவையாளர்களாகவும் இலங்கை முழுக்க பரந்து விரிந்துள்ளது. களுத்துறையில் ஆரம்பித்து நாவற்குழி வரை ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக பெருமை மிகு சேவையாற்றி மணிவிழாக்காணும் திரு.சின்னத்தம்பி பவளகுமாரன் அத்தகையர்களில் முக்கியமான ஒருவர் ஆவார்.

37வருடகால கல்விச்சேவையில் ஏறக்குறைய இரண்டு தசாப்தகாலம் அதிபர் பொறுப்பேற்று மிகவும் இக்கட்டான சூழ்நிலைகளில் பாடசாலைக்கு தலைமைத்துவம் வழங்கி தென்மராட்சிக் கல்விப்புலத்தில் குறிப்பிடத்தக்க அதிபர்களில் ஒருவராக மணிவிழாக்கண்டு சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். எல்லோரிடமும் சகஜமாக அன்பாக பழகுதல், அளவாக தேவையான இடங்களில் தனது கருத்தை முறையாக முன்வைத்தல் மற்றும் கடமையில் எப்போதும் முழுமையான ஈடுபாட்டுடன் செயற்படுதல் என்பன அவரிடமிருந்து நாங்கள் எல்லோரும் கற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த தலைமைத்துவப் பண்புகளாகும். மூத்த அதிபராக தென்மராட்சிக் கல்வி வலயத்தில் தொழிற்பட்டு ஏனையோருக்கு தன்னுடைய வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கியவர்.

சவாலான பொறுப்புக்களை துணிவுடன் ஏற்று எவ்வாறு சிறப்பாக செயற்படுவது என்பதில் ஒரு வழிகாட்டியாகவும், பல்வகைமை கொண்ட மாணவர்கள் தொகுதியினரை எவ்வாறு சிறப்பாக முகாமை செய்து முன்னேற்றுவது என்பதில் ஏனையோருக்கு ஒரு முன்னுதாரணமாக திகழ்ந்தவர் திரு.சின்னத்தம்பி பவளகுமாரன். அவர் தன்னுடைய சேவையால் எல்லோர் மத்தியிலும் பவளமாக மிளிர்ந்தார். அவருடைய புகழும் சேவையும் மேலும் சிறந்து எமது பிரதேசத்திற்கும் எமது கல்விப்புலத்திற்கும் அவருடைய உறவினருக்கும் குடும்பத்தினருக்கும் கிடைக்க வேண்டும் என்றும் ஓய்வின் பின் அவருடைய வாழ்வு சிறக்கவும் வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

நன்றி

**நடராசா சர்வேஸ்வரன்**

அதிபர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

24.03.2022



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தூர நோக்குள்ள அதிபர்



எமது பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய திரு.சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த வகையில் நான் ஆசிரியராக, பிரதி அதிபராக இருந்த காலத்தில் அதிபர் அவர்களிடம் பல விடயங்களை கற்றுக் கொண்டேன். நேர் மனப்பாங்கு, சிறந்த தொடர்பாடல் திறன், பொறுமை, தூர நோக்கு சிந்தனை, பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது போன்றவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

அத்துடன் அதிபர் அவர்கள் யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தின் மாணவர்களின் குடும்பச்சூழல் மற்றும் பாடசாலைச் சூழல் தொடர்பாக SWOT ஆய்வினை செய்து செயற்பட்ட மனிதர். இதனால் தான் பல இடர்கள் மத்தியிலும் சளைக்காது வெற்றிகளை கண்டவர். மாணவர்களின் குடும்பச்சூழலை உணர்ந்த அதிபர் அவர்கள் பாடசாலை அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கு மாணவர்களுக்கு சிறந்த கற்றல் சூழலையும் இணைபாடவிதான செயற்பாட்டினையும் வழங்குவதன் மூலமே கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்த முடியும் என்ற தந்திரோபாயத்தை நடைமுறைப்படுத்தினார். இவ்வாறு செயற்படுத்தும் போது பாடசாலையின் அடைவு மட்டமும் இணைபாடவிதானச் செயற்பாடும் படிப்படியாக அதிகரித்துக் கொண்டு சென்றது. இதை விட பௌதீகவள அபிவிருத்தியில் பாடசாலை ஒரு புதிய பரிமாணத்தை பெற்றது.

ஆசிரியர்களை பொறுத்தவரை அதிபர் அவர்கள் மென்திறனை கடைப்பிடித்து பாடசாலையின் வளர்ச்சியில் சாதனை படைத்தவர். எந்த ஒரு பணியிலும் பங்குபற்றுனராக செயற்படும் திறன் கொண்டவர். மாணவர்கள், ஆசிரியர்களை சரியான நேரத்தில் பாராட்டுக்களையும் கௌரவிப்புகளை வழங்குபவராகவும் மற்றவர் மனம் புண்படாமல் இனிய வார்த்தைகளால் காரியங்களை சாதிக்க கூடியவராகவும் திகழ்ந்தவர்.

இத்தகைய சமூக பண்பு நிறைந்த அதிபர் பணி நிறைவு பெறுவது எமது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பேரிழப்பாகும். எனினும் இவரது பணி தொடரவும் அவரது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாகவும், உடல் ஆரோக்கியத்துடனும், நீண்ட ஆயுளுடனும் வாழ வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. தனுஷியா மகாதேவன்,**

பிரதி அதிபர்

யா/நாவற்குழி மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கல்விச் சமூகத்திற்கு அரும்பணியாற்றி தனது அறுபதாவது வயதில் அரசசேவையிலிருந்து ஓய்வு பெறும் பவளகுமாரன் அவர்கள் இதுவரை காலமும் கல்விச் சமூகத்திற்கு வழங்கிய சேவையினைப் பாராட்டி வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தென்மராட்சி வலயத்தில் அர்ப்பணிப்பு மிக்க சேவையினை வழங்கியதுடன் சிறந்த ஆளுமையும், தலைமைத்துவத்தையும் தன்னகத்தே கொண்டு பாடசாலையின் அபிவிருத்திக்கு பெரும் பங்காற்றியிருந்தார் என்பதையும் நான் குறிப்பிட்டேயாக வேண்டும்.

கல்வியில் மட்டுமல்லாது பல சமூக, சமயப் பணிகளிலும் ஈடுபட்டு சமூகத்திற்கு பெரும்பணியாற்றியுள்ளார். இவர் தனது ஓய்வு காலத்தில் மேலும் சமூக சமய பணிகளை மேற்கொண்டு மகிழ்ச்சியாக வாழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏனைய பாடசாலைகள் பார்த்துப் பின்பற்றுமளவிற்கு ஒழுங்கமைப்புக் கொண்ட நிர்வாக கட்டமைப்பு, மாணவர் ஒழுக்கம், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், இணைபாட விதானச் செயற்பாடுகள் என்பவற்றில் எதுவித குறையுமில்லாது கடந்த பல ஆண்டுகளாக செயற்பட்டமை யாவரும் அறிந்ததேயாகும்.

அத்துடன் கல்வி அறிவு பொருளாதார வசதி, சமூக முன்னேற்றம் என்பவற்றில் பின்னடைவு கண்ட பெற்றோர்களின் பிள்ளைகள் பெருமளவில் கல்வி கற்பதற்கு ஊக்கமளித்து வளர்ச்சி பெற வைத்த பெருமை எங்கள் மணிவிழா நாயகனையே சாரும்.

பெற்றோர்கள் மட்டுமன்றி பழைய மாணவர்களது அரவணைப்பிலும் பல்துறை வளர்ச்சியைக் காணக்கூடியதாக இருப்பதற்கும் எமது மணிவிழா நாயகனே காரண கர்த்தாவாக விளங்கினார். நான் அதிபராக இருந்த போது என்னுடன் தோளோடு தோள்நின்று நேரம்பாராது உதவி செய்தமை என்னால் மறுக்க முடியாது. இவர் மேலும் பல சிறப்பியல்புகளை பெறவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

**க. மயில்வாகனம்,**

முன்னாள் அதிபர்,

யா/நாவற்குழி மகா வித்தியாலயம்,

தென்மராட்சி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்













Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன் வாழ்க வளமுடன்



யா/ நாவற்குழி மகாவித்தியாலயத்தின் அதிபர் திரு.சின்னத்தம்பி பவளகுமாரனின் அறுபதாவது அகவை பூர்த்தியை முன்னிட்டு அவரது கல்விச் சேவையை பாராட்டி வெளியிடும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வரைவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு.சி.பவளகுமாரன் அவர்கள் விஞ்ஞான பாட ஆசிரியராக தனது கல்விப்பணியைத் தொடங்கி நாட்டின் பலபாகங்களிலும் சிறப்பான பணியாற்றி பெரும் எண்ணிக்கையிலான மாணவச் செல்வங்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்தவர்.

தன்னை வளர்த்து உருவாக்கிவிட்ட சமுதாயத்தின் தேவைகளை அறிந்து நிறைவேற்ற வேண்டிய கடமை ஒவ்வொரு மணிதனுக்கும் உண்டு. அந்தவகையில் தலைசிறந்த ஆசிரியராக உன்னதமான பகுதித்தலைவராக அன்பும் பண்பும் நிறையப்பெற்ற அதிபராக கடமையாற்றி தன் பணியில் நிறைவுபெற்று அகமகிழ்ந்து ஓய்வு பெறும் அதிபர் அவர்களை எல்லா நலங்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

பணிநிறைவு செய்து நுழையும் ஓய்வுக்காலம் ஒப்பற்ற மகிழ்ச்சிக்குரியது. வழங்கிய சேவையின் கனிகளை சுவைக்கும் காலம். அன்பும் நன்றி உணர்வும் மறவாத மாணவ சமுதாயம் உளப்பூரிப்புடன் வாழ்த்தும் காலம். திசை எட்டிலிருந்தும் அருமையான மாணவச்செல்வங்கள் எம்மை மகிழ்விக்கும் காலம். அப்பேற்றினைப் பெற்ற அதிபர் அவர்களே வாழ்க வளமுடன்.

அன்பும் கருணையும் மிக்க உங்கள் உன்னதமான பணியை நாவற்குழி மக்களாகிய நாம் என்றென்றும் மறக்கமாட்டோம். நாங்களும் தங்கள் அன்புக் குடும்பமும் பல்லாண்டு காலம் வாழ்க வளமுடன் என்று வாழ்த்தி அமைகின்றேன்.

**திருமதி. வ. மேகலிங்கம்**

மேனாள் அதிபர்

யா/ நாவற்குழி ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



யா/ நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திரு.சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களின் ஓய்வு 19.04.2022 நடைபெற இருப்பதால் அன்றைய தினம் பாடசாலை சமூகத்தின் மலர் வெளியீட்டிற்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

அதிபர் அவர்கள் என்னுடன் 2002ம் ஆண்டு முதல் 2003 வரை தென்மராட்சியில் நடந்த அனர்த்தம் காரணமாக பாடசாலைகள் இயங்காமல் அனைவரும் இடம்பெயர்ந்து படிப்படியாக பாடசாலைகள் ஆரம்பித்த இக்கட்டான சூழலில் அதிபர் பரீட்சையில் சித்தியடைந்து என்னுடன் இணைந்து சேவையை ஆரம்பித்த காலப்பகுதியில் எனக்கு பக்க பலமாக இருந்து உதவி ஒத்தாசைகளையும் வழங்கினார். குறிப்பாக வெளிவேலைகள் வலயத்தில் செய்ய வேண்டிய ஆசிரியர்களின் தேவைகள் பரீட்சை வினாத்தாள் எடுத்தல் வங்கிச் சேவைகள் என பல்வகையில் உதவி செய்தார்.

இவர் கல்லூரியில் கடமையாற்றிய காலத்தில் ஆசிரியர்களிடமும் துணை ஆளணியினரிடமும் மாணவர்களிடமும் நன்மதிப்பைப் பெற்றார். திரு.பவளகுமாரனிடம் காணப்படும் தனித்துவமான பண்புதான் அவரை மட்டுமன்றி அவருடைய மகன், மகள் எதிர்காலத்தில் வைத்தியர்களாகவும், கடைசி மகள் பொறியியலாளராகவும் உயர் பதவிகளில் அமர வழி வகுத்தது. இந்நிலைமைக்கு குடும்பத்தை உயர்த்துவதற்கு உறுதுணையாக இருந்த அவரின் மனைவி சிறந்த விஞ்ஞான ஆசிரியர் திருமதி சாந்தநாயகி பவளகுமாரன் அவர்களும் போற்றற்குரியவர்.

அதிபர் அவர்கள் ஆசானாக இருந்த காலத்தில் தனியார் கல்வி நிலையங்களில் விஞ்ஞான பாடத்தை மாணவர்கள் போற்றக் கூடிய வகையில் இலகுவான முறையைக் கடைப்பிடித்து கற்பித்து மதிப்பைப் பெற்றார். இவர் என்னுடன் இணைந்து ஏற்கனவே ஆரம்பித்த சிறுவர் பூங்கா, இடப்பெயர்வின் போது ஏற்பட்ட உடைவுகள் விஞ்ஞான ஆய்வு கூடம், நூல்நிலையம், ஆரம்பப் பிரிவு சிறார்களின் வகுப்பறைகள் முதலியவற்றையும் அப்போது கையிருப்பில் இருந்த நிதிநிலைக்கேற்ப திருத்தி அமைத்து மீளவும் இயங்க வைப்பதற்கு அரும்பாடு பட்டார். இவர் சமூக சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்துவதில் பின்னிற்கவில்லை. கைதடிக் கிராமத்தில் உள்ள ஆலய பரிபாலனசபை உபபதிவாளர், பொருளாளர் பதவிகளையும், கைதடி லயன்ஸ் கழக அங்கத்தவர், பொது நூலக அபிவிருத்திச் சபை உறுப்பினராகவும் உள்ளார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அதிபர் அவர்கள் 37 வருட கால ஆசிரியர் சேவை, அதிபர் சேவை உட்பட மிகச் சிறப்புடன் நிறைவு செய்து இன்று 19.04.2022 மணிவிழாக் காண்கின்றார். இவர் மென்மேலும் நோய்நொடியின்றி பல்லாண்டு காலம் சுகதேகியுடன் வாழ வேண்டுமென்று இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

**திருமதி. பு. ஆறுமுகநாதன்,**

ஓய்வு பெற்ற அதிபர், யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி அறுபதாவது அகவையில் மணிவிழாக்காணும் திரு. சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் நான் ஆசிரியராக கடமையாற்றியபோது வித்தியாலயத்தின் நூற்றாண்டுவிழாவிற்கு சகல கல்வித்துறை சார்ந்தவர்களையும் ஒன்றிணைத்து சிறப்பாக நூற்றாண்டு விழாவை முன்னெடுத்து செய்த செயல்வீரன்.

நான் கற்பித்த, அதிபராக இருந்து பணியாற்றிய பாடசாலைகளில் சகலவேலைகளையும் தானே நேரகாலம் பார்க்காது செய்து முடித்து சகலகலாவல்லவனாகத் திகழ்ந்தார். இவ்வாறு தனது பணிக் காலத்தில் சிறப்பாக சேவையாற்றி மணிவிழாக்காணும் திரு. சி.பவளகுமாரன் அதிபரை தனது ஓய்வுக் காலத்தில் நோய் நொடியின்றி சிறப்பாக வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி. பரமேஸ்வரி செல்வநாயகம்,**

ஓய்வு பெற்ற அதிபர்.

யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பவள நாயகனுக்கு மணிவிழா வாழ்த்து



யாழ் நாவற்குழி மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றி சேவையில் இருந்து ஓய்வுபெறும் திரு.சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். நான் 1993ம் ஆண்டு யாழ் நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த பொழுது திரு பவளகுமாரன் ஆசிரியர் விஞ்ஞான பாட ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்த நாள் முதலாக அவர் எனக்கு அறிமுகமானவர். சிறந்த ஓர் ஆசிரியராக மட்டுமன்றி இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறந்த ஆசிரியராக விளங்கியவர்.

பாடசாலை இடப்பெயர்வின் பின்பும் சொந்த இடத்தில் மீளவும் ஆரம்பித்த போதும் எம்முடன் இணைந்து கடமையாற்றிக் கொண்டிருந்தார். மாணவர்களின் கல்வி அடைவு ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதில் நன் மதிப்பைப் பெற்று நல்லாசானாக விளங்கியவர். அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 2003ம் ஆண்டு யா/முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்திற்கு பிரதியதிபராக இடமாற்றலாகிச் சென்றார். மீண்டும் 2015இல் யா/நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு அதிபராக இடமாற்றம் பெற்று வந்தார். அப்பொழுது முதல் இரண்டு வருடங்களாக நான் பிரதியதிபராக அவருடன் இணைந்து சேவையாற்றினேன்.

அன்றுமுதல் இன்றுவரை அவர் பாடசாலையின் வளர்ச்சிக்கு மனத்திடத்துடன் பணியாற்றியவர். அவருடன் நான் பிரதியதிபராக இருந்தபோது அவரது ஆளுமைத் திறன்களை நன்கு அவதானித்துள்ளேன். சிறந்த கல்வியியலாளர், நல்லகுணவான், பண்புள்ளம் கொண்டவர், நாவடக்கம் மிக்கவர், எப்பவும் ஆசிரியர்களை மனங்கோணாது வழிநடத்துவார். அவர்களின் தேவைகளை அறிந்து செயலாற்றுவார். மாணவர்களின் நலன்களில் மிகவும் உன்னிப்பாக கவனம் செலுத்தி அவர்களை நல்வழிப்படுத்துவார்.

அவரது சொந்த ஊரான கைதடி தெற்கில் இருந்து எட்டு வருடங்களாக நான் பாடசாலைக்கு வந்துள்ளேன். அப்பொழுது அவரது சமூக சேவைகளையும் கண்டு பெருமிதம் கொண்டுள்ளேன். ஆலய பரிபாலனசபை பொருளாளராகவும், உபதலைவராகவும், கைதடி பொதுநூலக உறுப்பினராகவும் தொண்டாற்றியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்

எச்சத்தால் காணப்படும்" என்பது வள்ளுவர் வாங்கு. அவரது எச்சங்களாக காணப்படுவது மாணவர்களும், அவரது சந்தானங்களாகிய பிள்ளைகளும் எனலாம்.

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்ற பழமொழிக்கு ஏற்ப அவரது பிள்ளைகள் மூவரும் மருத்துவர்களாகவும் பொறியியலாளராகவும் இன்று உயர்ந்து நிற்கின்றனர். இது அவர் ஆற்றிய தன்னலங் கருதாப் பணிக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

இவ்வாறாக ஆசிரியராக அதிபராக இருந்து அவர் ஆற்றிய சேவைகளை நினைவு கூர்வதுடன் அப்பேற்பட்ட பவள நாயகனின் பணியினையுவந்து மணிவிழா காண எனது வாழ்த்துக்களை கூறுவதுடன் அவரது குடும்பம் மேலும் சிறப்புற்று பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**திருமதி. சுசீலா செல்வராசா**

ஓய்வு பெற்ற பிரதியதிபர்

யா/நாவற்குழி மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கடந்த 37 வருடங்களுக்கு மேலாக ஆசிரியராக, பகுதி தலைவராக, உப அதிபராக, அதிபராக, வினைத்திறன் உடன் கடமையாற்றிய திரு. சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்கள் தனது அறுபதாவது அகவையை பூர்த்திசெய்து கல்விச்சேவையில் இருந்து ஓய்வுபெறும் அவரைப் பாராட்டி வெளியிடப்படும் மணிவிழா மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு சின்னத்தம்பி பவளகுமாரன் அதிபர் அவர்கள் தனது கல்விப்பணியினை களுத்துறை மாவட்டத்தில் மத்துகம வித்தியாலயத்தில் தனது கல்விப் பணியினை ஆசிரியராக ஆரம்பித்து பின்னர் யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகவும் பின்னர் யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபராகவும், அதிபராகவும் கடைமையாற்றி இறுதியில் யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தில் அதிபராகவும் கடமையாற்றி தனது கல்விப் பணியினை நிறைவு செய்கின்றார்.

திரு சின்னத்தம்பி பவளகுமாரன் பெயருக்கு ஏற்றாற் போல அவர் ஒரு பவளம் தான் அவர் ஒரு பல்துறை ஆற்றல் கொண்டவர். கல்வி சார் திட்டங்களில் சிறந்த இலக்கினை அடையக்கூடிய பண்பைக் கொண்டவர். சிறந்த செயற்றிட்ட முகாமையாளர். அதிபர் ஆசிரியர்களுக்கெல்லாம் சிறந்த முன்மாதிரியானவர். கல்வி சார்ந்த, சாராத எந்த விடயமாக இருந்தாலும் சிறந்த முன்மாதிரியான கருத்திட்டங்களை முன்வைக்கக் கூடிய ஆற்றல் கொண்டவர். மனிதநேயம் சிறந்த மனப்பாங்கு போன்ற பல்வேறு ஒழுக்க விழுமியங்களை கொண்டவர். முரண்பாடற்ற முறையில் விடயங்களை இலகுவாக கையாளும் ஆற்றல் கொண்டவர். எல்லோருடனும் ஒத்திசைவான விடயங்களை இலகுவாக முன்னகர்த்தும் ஆற்றலும் திறனும் கொண்டவர். என்னுடன் சிறந்த நண்பராக உறவினராக சக ஆசிரியராக அதிபராக பல்வேறு மட்டங்களில் அவருடன் பழகியதுண்டு. எவரையும் அவர் குறைவானவர் என்று கருதுவதில்லை எல்லோருக்கும் ஒவ்வொரு ஆற்றல் உண்டு என்பதை மதித்து பழகுபவர்.

பாடசாலைகளுக்கும் சமூகத்துக்கும் சிறந்த சேவையாற்றி ஓய்வு பெறும் அதிபர் அவர்கள் ஓய்வு காலத்தில் சகல வளமும் ஆரோக்கியமும், மகிழ்வும் பெற்று வாழ இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**A.K. இரவீந்திரன்**

ஓய்வு பெற்ற பிரதி அதிபர்

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவத்தின் தலைமை



எமது பாடசாலைப் பிரதேசம் பல சமூகங்களையும் பல்தரப்பட்ட மக்களையும் கொண்டமைந்துள்ள பிரதேசமாகும். அத்தனை சூழமைவுக்கேற்ப பாடசாலை என்னும் இயந்திரத்தைக் கொண்டியக்குவதென்பது மிகக் கடினமான விடயம் என்பதில் ஐயமில்லை. இங்கு மாவிலும் நோகாமல் மாங்காயிலும் கேளாமல் நிர்வாகம் நடத்த வேண்டிய தேவையுள்ளது. அந்த வகையில் முகாமைத்துவத்தில் வெற்றி கண்டவர் எமது அதிபர் சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்கள். பாடசாலைப் பௌதீக வளத்தைப் பெருக்குவதிலும், சமூக உறவாடலை மேம்படுத்துவதிலும், மாணவர் நலன்புரியில் மிக அக்கறைகொண்டுழைப்பதிலும் கல்வி அபிவிருத்தியில் தன்னிகரற்று விளக்குவதிலும் இணைபாடவிதானத்தில் உற்சாகமூட்டுவதிலும் மேம்பட்டு நின்றவர். அதிபரின் ஓய்வு காலம் இனிதாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**திரு. ச.ஜெனில் சங்கர்**

தலைவா்

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,

யா/நாவற்குழி மகாவித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் நலன் புரிச்சங்கச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி

# கல்வியின் மீதான வாசிப்பு...



"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமைக்கும் ஏமாப்பு டைத்து பிறவிகள் தோறும்"

அதிபர் சின்னத்தம்பி பவளகுமாரன்

நாவற்குழி தமிழ் மகா வித்தியாலயம் கைதடி

கணித, விஞ்ஞான ஆசிரியராக கல்விபுலத்தில் அறிமுகமாகி ஆசிரியராய், அதிபராய் என பாடசாலை ஒழுங்கமைப்பில் உறுதியான வளர்ச்சியில் தன் நிர்வாக ஆளுமையை வேரூன்றச் செய்தவர்.

கைதடி தெற்கு, கைதடி தனது பிறப்பிடமாக கொண்டு 1962.04.20 ஆம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் பெற்றார். கல்விமாணி பட்டதாரியான அதிபர் சி.பவளகுமாரன் அவர்களின் கல்விப்பணி யாழ்ப்பாணத்தைத் தாண்டியும் நீடித்தது. களு/மத்துகம சாந்தமேரி வித்தியாலயம், தான் கற்ற முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம், நாவற்குழி மகாவித்தியாலயம் வரை அவர்களின் கல்விச்சேவை மூன்று தசாப்தங்களாக கடந்தது.

கல்விப்பணியுடன் கைதடி வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை உபதலைவர், பொருளாளர் மற்றும் கைதடி பொதுநூலக அபிவிருத்திசபை உறுப்பினராகவும், சமூக பணிகளையாற்றியவர்.

பன்முக ஆளுமை கொண்ட அதிபர் சி.பவளகுமாரன் அவர்கள் சிறந்த நிர்வாகம் புரிந்து எத்தகைய பிரச்சினைகளையும் திடமாக எதிர் கொண்டு தீர்வு காணும் நுண்ணிய அறிவாற்றல் கொண்டவர். மாணவச்செல்வங்களின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடன் பணியாற்றியவர். மிகச்சினேக பூர்வமான உறவுகளை தனது சக உத்தியோகத்தர்களுடன் கொண்டிருந்தவர். பாடசாலை சமூகத்தின் பெற்றோர், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் என ஒட்டுமொத்தமான பாடசாலை சமூகத்தின் மாண்பைப் பெற்றவர். நெகிழ்ச்சி மிக்க நிர்வாக ஆற்றலினால் தனது வாழ்நாளை கல்விப்புலத்தில் நிலை நிறுத்தி யாழ் மண்ணின் கல்விப்பாரம்பரியத்தின் இன்னுமொரு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலிமையாக தன்னை அதிபர் சி.பவளகுமாரன் பதிவு செய்து, நீண்ட குறைவற்ற பணியிலிருந்து 2022.04.20ஆம் திகதி ஓய்வு பெறுகின்றார்.

அதிபர் சி.பவளகுமாரன் அவர்களின் கீழ் பணியாற்ற கிடைத்தமை ஒரு பேறாக நினைக்கின்றோம். அதிபர் அவர்களின் ஓய்வு காலம் நோய்நொடிகளற்ற தேகாரோக்கியத்துடன் அவர் தன் குடும்பத்தாருடன் நீண்ட ஆயுள் பெற்று வாழ எல்லாம்வல்ல பரம்பொருளை பிரார்த்திக்கின்றேன்.

**ப.அங்கசன்**
செயலாளர்
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனுக்கு ஒரு வாழ்த்துக் கவி



கைதைமண் பெற்றெடுத்த மணி விழா நாயகனாம்
சின்னத்தம்பி பவளகுமாரன் எனும் நாமம் கொண்ட பண்பாளன்
வண்ணமிகு தோற்றமும் வாண்மை நிறை ஆற்றலும்
எண்ணமதில் உயர்வும் கொண்டவரே!

தங்கள் பணிநிறை நயப்பினை மனமகிழ்வுடன்
வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன்.

கடமையே கண்ணாக தம் கருத்திலே பதித்து
விஞ்ஞான பாட நல்லாசிரியராய் பணியாற்றி
பயனுள்ள மாணவர்களை பள்ளியிலே உருவாக்கிய பெருமகனார்,
மாணவருக்கு ஒளியாய் உளைத்தவேளை
இரண்டாயிரத்து மூன்றில் கைதடி முத்துவின் முதல்வரானீர்
பாடசாலை தேவைகளை இணங்கண்டு
படிப்படியாக முன்னேறி பயனும் பல கண்டீர்
இரண்டாயிரத்து பதினைந்தில் நாவற்குழி மகாவித்தியாலய அதிபரானீர்
பாடசாலை முன்னேற்றத்தில் சான்று பகன்றது.
ஒழுக்கத்தோடு ஒட்டியகல்வி கலாச்சார விழுமியங்களை
மாணவரிடையே எடுத்தியம்பிய ஏற்றமும் பல கண்டீர்

மகுடம் வைத்தாற்போல வருடாவருடம் மாணவர்கள்
திறமையை வெளிப்படுத்தி பல்கலைக்கழகம் செல்ல
பலமாய் நின்றுழைத்தீர்!
ஓய்வுபெறும் வேளையில் உங்கள்
வளமான வாழ்விற்காய் மணிவிழா நாளிலே
மனதார வாழ்த்துகின்றேன்.

**திருமதி. சிவலோஜினி கிருஷ்ணமூர்த்தி**
(பகுதித் தலைவர்)
யா/நாவற்குழி மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தில் நீண்ட நாள் பணியாற்றி இன்று ஓய்வு பெறும் அதிபர் திரு.பவளகுமாரன் அவர்களிற்கு வாழ்த்தினைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப் பாடசாலையில் 1991 இல் இருந்து 2002 ஆம் ஆண்டு வரை ஆசிரியராக கடமையாற்றி இப் பாடசாலை பற்றியும் பாடசாலை சமூகம் பற்றியும் நீண்டகால அறிமுகமும் அனுபவமும் கொண்ட ஒருவராகத் திகழ்ந்தார். ஆசிரியராக கடமையாற்றியதைத் தொடர்ந்து 2015 நவம்பர் 23 ஆம் திகதி இப்பாடசாலை அதிபராக கடமையாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இப் பாடசாலைக்கு வருகை தரும் கணிசமான மாணவர்களது குடும்ப சூழல், பொருளாதாரச்சூழல் போன்ற பலகாரணிகள் மாணவர்களது கல்விக்கு உகப்பற்றதாக காணப்பட்டாலும் எம் அதிபரது தலைமைத்துவத் திறமையாலும் விடா முயற்சியாலும் அனைத்து பிரச்சினைகளையும் நீக்கி பாடசாலை அடைவு மட்டத்தை உயர்த்துவதில் பெரும் பங்காற்றிக் கொண்டார்.

மாணவர்களது அடைவு மட்டத்தை உயர்த்துவதற்காக இணைபாடவிதான செயற்பாடுகள் அதிகரித்தல், பாடசாலையின் கவின் நிலையை மேம்படுத்தல், வகுப்பறைச் செயற்பாடுகளில் நவீன கற்பித்தல் செயற்பாடுகளைக் கையாண்டு வருகின்றார். இவர் பாடசாலையில் கடமையேற்ற காலத்திலிருந்து மாணவர் கற்றலுக்கான வகுப்பறை அடிப்படை வசதிகள், நவீன கற்பித்தலுக்கேற்ற உபகரணவசதிகள் பாடசாலையின் சொத்துக்களையும் வளங்களையும் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் மற்றும் ஆசிரிய வாண்மை விருத்தி போன்றவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து அதனை சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகின்றார். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் பாடசாலை மாணவர்களின் அடைவு மட்டம். இணைபாடவிதான செயற்பாடுகள் படிப்படியாக அதிகரித்து செல்வதற்காக பக்க பலமாகச் செயற்பட்டார்.

அத்தோடு அனைத்து நேரங்களிலும் பாடசாலையின் வளர்ச்சி பற்றி சிந்தித்து செயலாற்றுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறான ஒருவர் ஓய்வு பெறுவது கல்வி சமூகத்திற்கும் இப் பாடசாலைக்கும் இக் கிராமத்திற்கும் பேரிழப்பாக அமைந்தாலும் ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

**திரு க. அன்ரன் தேவகுமார்**
பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



அகவை 60ல் காலடி வைத்து மணிவிழா காணும் நாயகனாம் எமது பாடசாலையின் அதிபர் சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வி எனும் பெருங்கடலில் பலருக்கு படகாக இருந்து கரை சேர்த்து விட்டு இன்று ஓய்வு பெறும் எம் அதிபருக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் நான் பெருமிதம் கொள்கின்றேன்.

**"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து"**

எனும் வள்ளுவனின் வாக்குக்கு இணங்கி அதை தனதாக்கி எமது பாடசாலையின் பௌதீக வளங்களை பக்குவமாய் கையாண்டு கையளித்த பெருமையும் உங்களையே சாரும்.

2015ல் இருந்து இன்று வரைக்கும் தலைமைத்துவத்தை தனதாக்கி ஓர் சிறந்த அதிபராக பதவியேற்று பலதரப்பட்ட மாணவர்களை பதர்போல பகுத்தெடுத்து பல கல்விமான்களை உருவாக்கிய பெருமையும் உங்களைச் சாரும்.

"கனவு காணுங்கள்" என்ற அப்துல்கலாம் அவர்களின் வார்த்தைக்கிணங்க பலரின் கனவுகளை நிஜமாக்கினீர்கள்.

07 ஆண்டுகளில் ஒரு சிறந்த அதிபராக பல்வேறு இன்னல்களின் மத்தியிலும் சிறந்த நிர்வாகத் திறனுடன் பணியாற்றிய உங்கள் பணியை பாராட்டுகின்றேன். எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கிளைகளை ஒன்றிணைத்து செயற்படுத்தியதை இவ்விடத்தில் நினைவு கூற கடமைப்பட்டுளேன்.

உங்களின் ஓய்வுக் காலமானது சிறந்த உடல், உள ஆரோக்கியத்துடனும் அமைந்திட இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

ஓய்வு நிலையின் பின்பும் எமக்கு ஓர் தூணாக பக்கபலமாக இருப்பீர்கள் என நம்புகின்றோம். மீண்டும் ஒரு தடவை இன்று மணிவிழா காணும் நாயகனுக்கு வாழ்த்துக்களையும் வாழ்த்துச் செய்திகளையும் தெரிவித்து கொள்கின்றேன்.

**திரு. இ. யோகேஸ்வரன்**

செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
யா/நாவற்குழி மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியா வாழ் யாழ்/நாவற்குழி மகா வித்தியாலயம் பழைய மாணவர்கள் ஒன்றியத்தின் வாழ்த்துகளுடன் கூடிய நன்றி கூறல்...!

*பெருமதிப்பிற்குரிய உயர்திரு சின்னத்தம்பி பவளகுமாரன் ஆசான் அவர்களுக்கு வணக்கம்.*

*கைதடியை பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும் நாவற்குழி மகாவித்தியாலயத்திலேயே தங்களது வாழ்க்கையின் அதிகளவு நேரங்களைச் செலவு செய்தமைக்கு முதற்கண் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*1991ம் ஆண்டு யாழ்/ நாவற்குழி மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான பாட ஆசிரியராக கடமையாற்ற ஆரம்பித்தீர்கள். அந்தக் காலம் தொட்டு இன்றுவரை மாணவர்களோடும் சக ஆசிரியர்களோடும் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொண்டீர்கள். எந்தவொரு மாணவர்களும் உங்களது கையில் தடியையோ, பிரம்பையோ பார்த்ததில்லை என்றே கூறுகின்றார்கள். அந்தளவிற்கு அன்பால் மாணவர்களின் மனதை வென்றவர் ஆகின்றீர்கள்.*

*நீங்கள் தலைமை ஆசிரியராக எமது பாடசாலையின் முதல்வராக பணியேற்று வந்தநாள் தொடக்கம் இன்றுவரை ஆற்றிய அளப்பரிய சேவைகள் கொஞ்ச நஞ்சமில்லை.*

*அதிலும் முக்கியமாக புலம்பெயர்ந்து வாழும் பழைய மாணவர்களை அன்போடு அரவணைத்து நீங்கள் படிக்கின்ற காலத்தில் இருந்த பாடசாலை, அப்படியே வளர்ச்சியின்றி இனிமேலும் இருப்பதையா நீங்கள் விரும்புகிறீர்கள்? என்ற அன்புரிமையுடனான கேள்வியுடன் தட்டிக் கொடுத்ததோடு மட்டுமல்லாது அவர்களிடம் பழைய மாணவர் சங்கங்களை நீங்கள் வாழ்கின்ற நாடுகளிலே கட்டமைத்து யாழ்/நாவற்குழி மகா வித்தியாலத்தில் கல்வி பயின்ற அத்தனை உறவுகளையும் ஒருங்கிணைத்து பாடசாலையின் வளர்ச்சிக்கு பாடுபட்டு பங்களித்து உறுதுணையாக நில்லுங்கள் எனவும், எதிர்கால சந்ததிக்கு நல்ல வழிகாட்டியாகவும் நடந்து கொள்ளுங்கள் என்ற அறிவுரையைத்தந்து எங்களை அசரவைத்தீர்கள்.*

*அதன் நீட்சியால் நமது பாடசாலையின் வளர்ச்சி மெல்ல மெல்ல மேலோங்கி பாடசாலையை விரிவாக்கம் செய்து, நன்றாகச் சீரமைத்து, திறன் வகுப்பறைகளையும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கி உங்களின் பணி காலம் முடிவடையும் முன்பாக ஒரு கல்லூரியில் கிடைக்கப்பெறும் அத்தனை வசதிகளையும் நமது வருங்கால மாணவர்களுக்காக ஏற்படுத்தித் தந்துள்ளீர்கள்.

உண்மையில் உங்களது நேர்மைக்கும், அன்புக்கும், பண்பிற்கும், அளப்பரிய சேவைக்கும் எமது உளமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு 60வது அகவை நிறைவு காணும் உங்களுக்கு கனிந்த உள்ளத்தோடு எமது இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்களது ஓய்வு காலம் இவ்வளவு சீக்கிரம் வந்ததையிட்டு எமக்குச் சற்று மனவருத்தம் தான். இருந்தாலும் உங்களின் அன்பும் அறிவுரையும் என்றென்றைக்கும் தொடர்ந்தும் இருக்க வேண்டுமென்று மிகவும் அன்போடும் உரிமையோடும் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆதலால் எமது பாடசாலை உங்களுக்கு ஓய்வு தந்தாலும், நாங்கள் எப்பவுமே உங்களுக்குப் பிரியாவிடை தரப்போவதில்லை.

நமது பாடசாலையின் வரலாற்றில் நீங்கள் ஒரு மைல் கல் என்றால் அது மிகையாகாது!! காலம் முழுவதும் உங்களின் பெயரும், சேவையும் உச்சரிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்களே கிடையாது!!

எங்களுக்கு அறிவூட்டி, பாடசாலைக்கு மெருகூட்டி, எமது உள்ளமெங்கும் நிறைந்துவிட்ட ஆசானே,, என்றென்றைக்கும் உங்களை மறவாதிருப்போம்.

நன்றியுடனும் மகிழ்வுடனும்.

**யாழ்/நாவற்குழி மகா வித்தியாலய பழைய மாணவர் ஒன்றியம்**

பிரித்தானியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்

"கல்வி செம்மல்"என்னும் மாண்பினை ஏற்றி
மணி விழா காணும் நாயகனை வாழ்த்துகின்றோம்..

மானிட வாழ்வின் உயர் மிகு விழுமியங்களை தன்னகத்தே தாங்கி கல்வி பணிதனை உயர்வுடன் செய்து பணி நிறைவு காணும் எம் மதிப்புக்குரிய திரு. பவளகுமாரன் (முதல்வர்) அவர்களை இன்றைய நாளில் வாழ்த்துவதில் பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் பெரு மகிழ்வடைகிறது.

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.
வள்ளுவனின் வாய்மை மிகு குறள் உரைப்பது யாதெனில்

அறிவு அழிவு வராமல் காக்கும் கருவியாகும், அன்றியும் பகைகொண்டு எதிர்ப்பவர்க்கும் அழிக்க முடியாத உள்ளரணும் ஆகும். இத்தகைய அழிவற்ற கல்வி செல்வத்தை எமக்கு உவந்தளித்த போற்றுதலுக்குரியவரை பாராட்டும் பெருமை மிகு தருணமிது.

பாடசாலை என்பது நாளைய எம் நாட்டின் எதிர்கால சிற்பிகளை உருவாக்கும் உன்னதமான கருப்பீடம் அத்தகைய பெருமதிப்பு மிக்கதொரு கல்விச்சாலையை நிர்வகிப்பது என்பது பெரும் பணி அப்பணியை எமது பாடசாலையில் ஆரம்ப நிலையில் ஆசிரியராக பணியாற்றி பின்னர் முதல்வராகவும் பணியாற்றும் பெரும் வரத்தை பெற்றவர்கள் ஒரு சிலரே அதில் பணி நிறைவு பெறும் எம் முதல்வரின் சேவையும் அவரின் அயாராத உழைப்பும் போற்றுதலுக்குரியது.

எமது சங்கம் ஓய்வு நிலை முதல்வர் திருமதி.மேகலிங்கம் அவர்களின் பிரான்ஸ் நாட்டு வருகையோடு தனது பணிகளை தொடங்கிய போதிலும். முதல்வர் திரு. பவளகுமாரன் அவர்களின் பணி காலத்தில் பாடசாலையின் பல தேவைகளை பூர்த்தி செய்து கொடுத்துள்ளோம் என்னும் மனநிறைவு உள்ளது.

தனது பணிக்காலத்தில் எத்தனை இடர்களை தாண்டி தனது சேவையின் மீது அதீத நம்பிக்கையுடன் எமது பாடசாலையின் உயர்வுக்கு உழைத்தார். என்பதுக்கு இன்றைய பாடசாலையின் கல்வி மற்றும் விளையாட்டு பௌதீக வளங்கள் என்பன சான்றாகி இருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மராட்சி மண்ணின் மைந்தன் தொன்மை மிகு எமது பாடசாலையின் ஆசிரியராய் இன்று பணி நிறைவு செய்யும் முதல்வராய் இருந்திருப்பது.எமது பாடசாலை சமூகத்துக்கும் எமது மாணவ செல்வங்களுக்கும்.எல்லோருக்கும் பொதுவான இறையவன் அருளிய பெரு வரமாகவே நாம் கருதுகிறோம்.

எங்களது சங்கத்தின் வரலாற்று புத்தகத்தின் பக்கங்களில் முதல்வரின் பெயரும் நிலைபெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

கல்வி என்னும் பெரும் செல்வத்தை உவந்தளித்த ஆசானை மாண்பேற்றும் பெரும் கடமையை பண்போடும் பணிவோடும் எமது பாடசாலை சமூகம் செய்யும் இன்றைய பொன்னாளில் பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் "கல்வி செம்மல்"என்னும் மாண்பினை ஏற்றி மணி விழாவின் நாயகனை வாழ்த்தி மகிழ்கின்றோம்

அக மகிழ்வும்
உள நலமும்
என்றும் நிறைவு பெற்று
வாழ்க பல்லாண்டுகள்.

**இ. பத்திவேல்,** தலைவர்
**க. விஜிதராஜ்,** செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர் சங்கம் - கனடா

இந்து ஆழியின் இயற்கை வெண்வலம்புரிச் சங்காய் ஒளி தரும் எம் ஈழத்தாயின் யா/ நாவற்குழி மகாவித்தியாலயத்தின் அதிபர் திரு.சின்னத்தம்பி பவளகுமாரனின் அறுபதாவது அகவை பூர்த்தியை முன்னிட்டு அவரது கல்விச் சேவையை பாராட்டி வெளியிடும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வரைவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு.சி.பவளகுமாரன் அவர்கள் விஞ்ஞான பாட ஆசிரியராக தனது கல்விப்பணியைத் தொடங்கி நாட்டின் பலபாகங்களிலும் சிறப்பான பணியாற்றி பெரும் எண்ணிக்கையிலான மாணவச் செல்வங்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்தவர்.

தன்னை வளர்த்து உருவாக்கிவிட்ட சமுதாயத்தின் தேவைகளை அறிந்து நிறைவேற்ற வேண்டிய கடமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. அந்தவகையில் தலைசிறந்த ஆசிரியராக உன்னதமான பகுதித்தலைவராக அன்பும் பண்பும் நிறையப்பெற்ற அதிபராக கடமையாற்றி தன் பணியில் நிறைவுபெற்று அகமகிழ்ந்து ஓய்வு பெறும் அதிபர் அவர்களை எல்லா நலங்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

பணிநிறைவு செய்து நுழையும் ஓய்வுக்காலம் ஒப்பற்ற மகிழ்ச்சிக்குரியது. வழங்கிய சேவையின் கனிகளை சுவைக்கும் காலம். அன்பும் நன்றி உணர்வும் மறவாத மாணவ சமுதாயம் உளப்பூரிப்புடன் வாழ்த்தும் காலம். திசை எட்டிலிருந்தும் அருமையான மாணவச்செல்வங்கள் எம்மை மகிழ்விக்கும் காலம். அப்பேற்றினைப் பெற்ற அதிபர் அவர்களே வாழ்க வளமுடன்.

அன்பும் கருணையும் மிக்க உங்கள் உன்னதமான பணியை நாவற்குழி மக்களாகிய நாம் என்றென்றும் மறக்கமாட்டோம். நாங்களும் தங்கள் அன்புக் குடும்பமும் பல்லாண்டு காலம் வாழ்க வளமுடன் என்று வாழ்த்தி அமைகின்றேன்.

**பழைய மாணவர் சங்கம் கனடா**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தி மகிழ்கின்றோம்...!

யாழ் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் கடந்த ஏழுவருடங்களாக (20.11.2015) அதிபராகக் கடமையாற்றி பணி ஓய்வு பெற்றுச் செல்லும் திரு. பவளகுமாரன் அவர்களுக்கு எமது வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மட்டில்லா மகிழ்வு கொள்கின்றோம்.

"கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் புகழ்" என்பது உண்மையான விடையமாகும். "கல்வி கல்லாதவர்களைப் பார்த்து முகத்தில் இரண்டு புண் உடையார்" என வள்ளுவப் பெருந்தகை எமக்கு எடுத்துரைத்திருக்கின்றார். தாம் பெற்ற கல்வியைப் பிறருக்குக் கொடுப்பதே கல்வியின் சிறப்பு என்றும், கொடை என்றும் கருதப்படுகின்றது.

அந்தவகையில் கடந்த ஏழு வருடங்களாக எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கும் பாடசாலை வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்டு உழைத்த கல்விச் சீராளன், அதிபர் திரு பவளகுமாரன் அவர்கள் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்குமுரியவரே.

அதிபர் அவர்கள் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்டு உழைத்தமையை நன்றியோடு பாராட்டுகின்றோம். எமது பாடசாலையின் வளர்ச்சி மட்டுமல்லாது தென்மராட்சிப் பிரதேசத்தின் கல்வி, சமூக அபிவிருத்திக்கு ஓயாது உழைத்தவருடன், தனது பங்களிப்பை வழங்கி வருவதையும் நாம் அறிவோம். 19.04.2022 திகதியில் பணி ஓய்வு பெற்றாலும் கல்வி, சமூக, பொதுப்பணிகளை முன்னெடுப்பார் என நம்புகின்றோம்.

திரு பவளகுமாரன் அவர்கள் சுகநலன்களுடன் நீண்ட ஆயுள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"வளர்க, வாழ்க அவர் நாமம்"

நன்றியோடு வாழ்த்துக்களைப் பகிர்கின்றோம்

**வைரமுத்து சிவராசா. (15.02.2022)**

(பழைய மாணவன்)

பிரதம ஆசிரியர் "மண்" கல்வி. கலை. இலக்கிய. சமூக சஞ்சிகை - ஜேர்மனி

கல்விச் செயற்பாட்டாளர் தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியம்.

International Federation of Thenmaradchi foundation.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



யா/நவற்குழி மகாவித்தியாலய அதிபர் சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்கள் அகவை அறுபது எய்தி இன்று மணிவிழாக் காண்கின்றார். இவர் ஆசிரியராக, அதிபராக இருந்து அரியபணியாற்றிய பெருமைக்குரியவர். ஒரு சிறந்த அதிபருக்குரிய ஆளுமையும் சிரித்த முகமும் சிறந்த பண்பும் வித்தியாலய வளர்ச்சிக்கு அணிகலமாய் திகழந்து, மாணவர் மத்தியில் ஒழுக்கப்பண்புகளையும் சமய விழுமியங்களையும், அறநெறிக் கருத்துக்களையும் வளர்த்த பெருமகனார். கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் எந்நிகழ்வானாலும் தவறாது கலந்து பங்கு கொண்டு சிறப்பிப்பார்.

இவர் மணிவிழாக் கண்டு அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெற்று கல்வித் துறைக்கும் சமூகத்திற்கும் தொடர்ந்து சேவையாற்றி நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து ஆத்மீக சிந்தனையில் காலத்தை இனிதே கழிக்க இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**இ. குழந்தைவடிவேலு,** JP
தலைவர்.
ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம்.
கைதடி.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவிதை

## பவளமால்



கன்று தன் பயமுலை மாந்த
முன்னிற் கனிஆவுண்ணும் பெருவளவூர
சுபகிருது வருடம் சித்திரைத் திங்கள்
ஏழாம் நாள் சித்திரை நட்சத்திரத்தில்
சிறிமான் சின்னத்தம்பிக்கும் தரணி ஆள் தங்கம்மாவிற்கும்
வாய்த்த நல் மழலையாய்
ஆயிரத்து மும்மூன்று நூற்று மூவிரண்டு பத்து
இரண்டில் வந்துதித்தனன் உலகம் உய்ய
குறு முனியை ஒத்தனன்
குறுகத்தறித்த பார்வையில்லை
ஆரம்பக் கல்வி கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில்
கனிஷ்ட இடைநிலை C.M.S இல்.
உயர்தரம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி
விஞ்ஞானத்தை மெஞ்ஞானமாக கற்றோன்
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில்
தாமரைவதனத்தாள் காந்தள் மென்விரலினாள்
குவளை கண்ணினாள் சாந்தநாயகி மேல்
காதல், கண்களும் கண்களும் பேசிக்கொண்டன
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்
பேசினபேச்சில் பிறந்தது காதல்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காதலித்த காரிகையையே கைபிடித்து
இல்லறமாம் நல்லறத்தில் புகுந்து
திரி மருப்பிரலை தெள்ளறல் பருகி
காமர் துணையொடு ஏமுற வதிய அன்ன
இளமை பாரார் வினை நசைஇச் சென்றோர்
இவணும் வாரார் எவணரோ என
நகுமே மாமி நறுந்தண் மாலை
கைதடி முத்துக்குமாரசுவாமியில் பிரதியதிபர்
அங்கேயே அதிபரும் ஆனார்
ஈராயிரத்து மூவைந்தில்
யா/ நாவற்குழி மகாவித்தியாலயத்தில்
அதிபராய் பவளம் பணியாற்றல்
பௌதீகவளப் பெருக்கம், மாண்புமிகு
மாணவர் நலன்புரி, கல்லூரியின் கவிநிலை
சால்புறு சமூகத்திற்கும் பாடசாலைக்குமான
இடைவினை, இனிப்பான இணைபாடவிதானம்
கசடற்ற கல்வி அபிவிருத்தியாவற்றிலும்
தன்னிகரற்ற சேவை
பிறர் பிள்ளை தலை தடவ
தன்பிள்ளை தானே வளரும்
என்பது மெய்ச்சுப்போய்ச்சு
வைத்தியர்களானார் இருவர்
பொறியியலாளர் ஒருவர்
வாழ்க வளமுடன்
இன்னும் நான்கு தசாப்பத்தம்.
மனையாளுடன் மக்களும் மகிழ்ந்தே.

திரு.பா.விக்கினேஸ்வரன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனின் வாழ்க்கைப் பாதையில்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனின் வாழ்க்கைப் பாதையில்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனின் வாழ்க்கைப் பாதையில்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனின் வாழ்க்கைத் தடங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனின் வாழ்க்கைத் தடங்கள்

**திரு.சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களின் வாழ்க்கைப் பதிவுகள்...**

பிறப்பு :- 20.04.1962
பிறந்த இடம் :- கைதடி தெற்கு, தென்மராட்சி
முகவரி :- கைதடி தெற்கு, கைதடி
தந்தை :- திரு. கார்த்திகேசு சின்னத்தம்பி
தாய் :- திருமதி. சின்னத்தம்பி தங்கம்மா

திருமணவாழ்வில் இணைதல் :- 27.01.1994
இல்லத்துணைவியார் :- திருமதி. சாந்தநாயகி பவளகுமாரன்
(ஆசிரியர்- பயிற்றப்பட்ட விஞ்ஞானம்)

பிள்ளைகள் :- பவளகுமாரன் ஜீவிதன்
(மருத்துவபீட இறுதியாண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
பவளகுமாரன் கோபிதா
(மருத்துவபீட 4ஆம் வருடம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
பவளகுமாரன் விதுர்சன்
(பொறியியல்பீடம் 1ஆம் வருடம் மொறட்டுவ பல்கலைக்கழகம்)

ஆரம்பக் கல்வி :- யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்

உயர்தரக் கல்வி :- யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

கல்வி மற்றும் தொழிற்தகமைகள் :- B.Ed தேசிய கல்வி நிறுவகம்
பயிற்றப்பட்ட விஞ்ஞானம்
ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, பலாலி
இலங்கை அதிபர் சேவை I (SLPS - 1)

பதவிகள் :- ஆசிரியர் சேவை - 1985 - 2003
களு/மத்துகம சாந்தமேரி வித்தியாலயம்
யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

அதிபர் சேவை :- 2003 - 2022
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

சமூக நலன்சார் சேவைகளும் வகித்த பதவிகளும்

உபதலைவர், பொருளாளர் :- கைதடி வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை
அங்கத்தவர் :- கைதடி லயன்ஸ் கழகம்
உறுப்பினர் :- கைதடி பொதுநூலக அபிவிருத்திசபை
செயலாளர் :- தென்மராட்சி அதிபர் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுமை மிக்க அதிபராக திரு.சி.பவளகுமாரன்

### பாடசாலையில் அதிபராக கடமையேற்ற காலம் முதல்

நாவற்குழி மகா வித்தியாலயம் மிகப் பரந்த ஏந்து பிரதேசத்தைக் கொண்டது. நாவற்குழி மறவன்புலவு, தச்சன்தோப்பு, கோவிலாக்கண்டி, ஐந்து வீட்டுத்திட்டம், முந்நூறு வீட்டுத்திட்டம், ஐயானார் கோவிலடி வீட்டுத்திட்டம் என அவை அமைகின்றன.

வீட்டுத்திட்டங்களிலிருந்து கணிசமான மாணவர்கள் எமது பாடசாலைக்கு வருகை தருகின்றனர். அவர்களது

- குடும்பச் சூழல்
- பொருளாதார வசதி
- வீட்டு அடிப்படை வசதி
- பெற்றோர்களின் கல்வி தொடர்பான அக்கறை
- சகபாடித் தொடர்பு

இவை மாணவரின் கல்விக்கு உவப்பற்றதாக காணப்படுவதனால் அவர்களின் வரவு, கல்வியடைவு, ஒழுக்கவிழுமியம் என்பவற்றில் தாக்கம் செலுத்துகிறது.

இப் பிரச்சினைகளை நீக்கி பாடசாலை அடைவு மட்டத்தை உயர்த்துவதில் பல சவால்களை எதிர் நோக்க வேண்டியிருந்தது.

இவற்றை நிவர்த்தி செய்வதற்காக

- இணைப்பாடவிதான செயற்பாடுகளை அதிகரித்தல்.
- பாடசாலையின் கவிவு நிலையை மேம்படுத்தல்.
- வகுப்பறை செயற்பாடுகளில் நவீன கற்பித்தல் செயற்பாடுகளை முன்னிறுத்தல்.
- கற்பித்தல் உத்திகளில் மாற்றங்களை ஏற்படுத்தல்.
- பிள்ளைநேய அணுகுமுறைகளை கையாளுதல்

போன்றவற்றை வலுப்படுத்துவதன் மூலம் மாற்றங்களை ஏற்படுத்த எங்கள் அதிபர் நம்பிக்கையுடன் செயற்பட்டார்.

அந்த வகையில் அவரது ஆளுமையால் நன்கொடையாளர்களை இனங்கண்டு

- பழைய மாணவர் தாய்ச் சங்கம்
- புலம் பெயர் பழைய மாணவர் சங்கங்கள்
  1. பிரித்தானியா கிளை
  2. பிரான்ஸ் கிளை
  3. கனடா கிளை
- பெற்றோர்
- அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள்
- தனிப்பட்டவர்கள்

ஊடாக பெற்றுக்கொண்ட உதவிகள் மூலமாகவும் பாடசாலையின் அடைவு மட்டத்தை துரிதகதியில் வளர்ச்சியுறச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரது காலப்பகுதியில் இருந்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இப்பாடசாலை மீது கொண்ட அக்கறையும் நேர் மனப்பாங்கும் பாடசாலையை முன்னேற்ற உதவியது.

அத்துடன் அதிபர் முன்னைய காலத்தில் இப் பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றும்போது அவரிடம் கல்விகற்ற மாணவர்கள் பழைய மாணவர்களாக இருந்து பல உதவிகளை தாமாக முன்வந்து செய்வதும், பாடசாலை சமூகத்தில் அதிபருக்கு அறிமுகமானவர்கள் அரச, அரசசார்பற்ற நிறுவனத்தில் இருந்து பக்கபலமாக உதவிகளை செய்வதும் பாடசாலையின் வளர்ச்சிக்கு முக்கிய கட்டமாகும்.

**பௌதிக வளம்**

மேசைக் கணினி, அலுமாரிகள், மழை நீர் தாங்கி, மாணவர் ஆசிரியர்களுக்கான மலசல கூடத் தொகுதி, பல்லூடக எயிறி, மின்விசிறிகள், நன்னீர்த்தாங்கி, கணினியறை புனரமைத்தல், Smart bell, Photo Copy Machine, Smart class Room, காணி கொள்வனவு, மலசலகூட நீர் இணைப்பு, மோட்டார், *110'X 25'* ஆரம்பப் பிரிவிற்கான மாடிக்கட்டடம், *50'X 25'* மாடிக்கட்டடம், *100'X 30'* சாந்தகுமாரி பிரார்த்தனை மண்டபம், பிளாஸ்ரிக் கதிரைகள், மின் இணைப்புகள், பாதுகாப்புக் கம்பிவலை, இருபக்க திறந்த அரங்கு, மைதான நுழைவாயிற் கதவு, விளையாட்டு முற்ற புனரமைப்பு, ஆங்கில செயற்பாட்டறை, கணித செயற்பாட்டறை மற்றும் பாடசாலை விளையாட்டு களஞ்சியவறை, அரங்கிற்கான திரைச்சீலை, பாடசாலையின் பாதுகாப்புக் கருதி கண்காணிப்பு கமரா போன்றவற்றை பாடசாலை மீது அக்கறை கொண்டவர்களின் உதவியினால் பெற்றுக் கொண்டார்.

**மாணவர் நலன்புரிச் சேவைகள்**

புத்தகங்கள், கற்றல் உபகரணங்கள், வெள்ளைப் பலகைகள், பச்சைப் பலகைகள், நிகழ்வுகளுக்கான அனுசரணை, விளையாட்டு உபகரணங்கள், சப்பாத்துக்கள், துவிச்சக்கர வண்டிகள், மேலைத்தேய வாத்திய குழுவிற்கான சீருடை இசைக்கருவிகள் என பல உதவிகள் மாணவருக்கு கிடைக்க ஆவன செய்தார்.

**கல்வியடைவு மேம்பாட்டிற்காக**

- ஆசிரியர் வாண்மை விருத்தி செயலமர்வுகளை ஒழுங்கமைத்தல்.
- நவீன கற்பித்தல் சாதனங்களை பெற்றுக் கொடுத்தல்
- நேர் மனப்பாங்கு ரீதியான கருத்தரங்குகளை நடாத்துதல்.
- ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்களுக்கான செயற்பாட்டறைகளை அமைத்து அதனூடாக செயற்பாட்டு ரீதியான கற்றலை ஊக்குவித்தல்.
- ஆரம்பக்கல்வி அடித்தளம் சரியாக இருக்க வேண்டும் என்பதற்காக மாணவர்கள் மகிழ்ச்சியாகவும் விருப்புடனும் கற்பதற்கு கவிந்நிலையான வகுப்பறையை ஏற்படுத்துவதற்கு ஆசிரியரை ஊக்குவித்தலும் பாராட்டுதலும்.
- வகுப்பு ரீதியான பெற்றோர் சந்திப்பு கூட்டங்களை நடாத்துதல்.
- சகல ஆசிரியர்களையும் சமமாக மதித்து ஆசிரியர்களின் நலனை பேணும் சிறந்த அணுகுமுறையான முகாமைத்துவம் என்பற்றை மேற்கொண்டார். இவரது நெகிழ்ச்சியான முகாமைத்துவம் இந்த அடைவுகளை இலகுவில் கிட்டச் செய்தது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள்














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவியல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய, மாணவ இடை வினையுறவு;

# கற்றல் கற்பித்தலில் அதன் முக்கியத்துவம்

**அறிமுகம்:**

பாடசாலை நடவடிக்கைகள் வெற்றிகரமாக இயங்குவதற்கு முக்கிய காரண கர்த்தாவாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களேயாவர். ஆசிரிய மாணவ இருசாராருக்கும் இடையிலுள்ள உறவின் முக்கியத்துவம் பற்றி இன்று பல தரப்பாலும் பேசப்படுகின்றது. மாணவர்களின் கற்றல் ஆர்வத்தைத் தூண்டி அவர்களின் அடைவுமட்டத்தை உயர்த்துவதற்கும் ஆசிரிய, மாணவ உறவுமுறை என்பது இன்று அர்த்தமுள்ளதாக விளங்குகின்றது. இத்தகைய உறவு முறைகளின் வலுவூட்டமான செயற்பாடுகள் கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

இடைவினை என்பது தனியொரு மனிதனோடு தொடர்புபடும் ஒரு செயற்பாடல்ல. இருவருக்கிடையில் அல்லது இருவருக்கு மேற்பட்டோருக்கிடையே நிகழும் ஒரு உறவு ஆகும். இந்த உறவின் தன்மையானது இறுக்கமாக அமையும் போது வகுப்பறைக் கற்பித்தல் என்பது இலகுவான செயற்பாடாக மாற்றம் பெறுகின்றது. இதே போன்று மனிதன் சூழலுடனும் இடைவினை கொள்கின்றான். இதன் மூலம் அவனின் கல்விச் செயற்பாடுகளும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

இடைவினை என்பது தனித்து ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் என்ற நிலையில் மட்டும் இருப்பதில்லை. பாடசாலைகளைப் பொறுத்த வரையில் இடைவினை என்பது பின்வரும் வகைகளில் அமையும்.

- ஆசிரியர் - மாணவர் இடைவினை
- ஆசிரியர் - ஆசிரியர் இடைவினை
- ஆசிரியர் - அதிபர் இடைவினை
- ஆசிரியர் - சமூக இடைவினை

ஆயினும் கற்றல் நடவடிக்கை இடம்பெறும் இடமாகிய வகுப்பறையில் ஆசிரிய மாணவ இடைவினையுறவு என்பது முக்கியப்படுத்தப்படுகின்றது.

இன்றைய கற்பித்தல் முறைகள் முற்று முழுதாக மாணவர்களை மையமாகக் (Child centered) கொண்டதாக அமைய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டாலும் நடைமுறையில் பரீட்சை மையம், ஆசிரிய மையம் என்ற கற்பித்தல் முறைகளைக் காணமுடிகின்றது. இவ்வாறு இருந்த போதிலும் மாணவ ஆசிரிய இடைவினையுறவின் நெருக்கத்தை ஏற்படுத்தலில் மாணவர் மையக் கற்பித்தல் முறை என்பது உணரப்படுகின்றது. இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய கல்விக் கொள்கைகள் இதற்கு முக்கிய இடம் கொடுத்தாலும் பரீட்சை என்ற நோக்கத்தை மையமாகக் கொண்ட கற்பித்தல் முறைகளை முழுமையாக நிராகரிக்க முடியாமல் உள்ளது.

## ஆசிரிய மாணவ இடைவினை உறவை வலுப்படுத்தலில் ஆசிரியர் சார் செயற்பாடுகள்:

ஆசிரியர் கற்பிக்கின்றார்: மாணவர்கள் கற்கின்றார்கள் என்ற நிலையில் இருந்து மாற்றம் பெற்ற செயற்பாடுகள் இன்று ஆசிரியரைப் பல்வேறு வகிபங்குகள் கொண்ட ஒருவராகக் காட்சிப்படுத்த முனைகின்றது. இன்று ஆசிரியர்கள் தனித்து தகவல்களை மட்டும் வழங்குபவர் என்ற நிலையில் இல்லாமல் கற்றலுக்கு வழிகாட்டி வசதியளிப்பவர், உதவிபுரிவர் என்ற வகையில் மாற்றம் பெற்றிருக்கின்றார். கல்வி முறையில் முக்கியமான தொடர்பு ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையில் நிகழ்கின்றது. இத்தகைய இடைவினையுறவானது மாணவர்களது கல்வியின் தரத்தினையும் அடைவு மட்டத்தினையும் உயர்த்திவிடுகின்றது. ஆனாலும், மாணவர்களின் கற்றலில் பல்வேறு காரணிகளின் செல்வாக்கு இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனால் ஆசிரியர்கள் இவ்விடயத்தில் அதிக அக்கறையுடன் செயற்படுதல் அவசியமானதாகும். கற்பித்தலில் தன்னைத் தயார்ப்படுத்தி முற்றுமுழுதாகத் தன்னை அர்ப்பணித்து மாணவர்களுக்கு ஏற்படக் கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பது ஆசிரியர்களின் கடமையாகும். கற்றலில் எதிர்நோக்கப்படும் தடைகள் நீக்கப்பட்டு அவர்களின் கற்றல் விரைவுபடுத்தப்பட வேண்டும்.

மாணவர்களின் அறிவை மட்டும் வளர்ப்பதை ஆசிரியர்கள் நோக்கமாகக் கொள்ளக்கூடாது. அவர்களின் சகலவிதமான முன்னேற்றத்திற்கும் ஆசிரியர்கள் பொறுப்பாக இருந்து செயற்பட வேண்டுமானால் ஆசிரிய மாணவ உறவு சரியான முறையில் பேணப்பட வேண்டும். மாணவர்கள் குடும்ப நிலை பற்றியறிதல், உடல் ஆரோக்கியத்தில் கவனமாயிருத்தல். சமூகமயமாக்கல் பற்றிய சிந்தனையை ஏற்படுத்தல். பாடசாலைக்கு வெளியிலான பிரச்சினைகள் பற்றியறிதல், தேவையற்ற செயற்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான ஆலோசனை வழங்குதல் போன்றவைகள் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் ஆசிரிய மாணவ தொடர்புகள் வலுப்பெறுகின்றன. ஆகவே ஆசிரியர்கள் சில விடயங்களைத் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

- மாணவர்களை அன்புடன் வழிநடத்துவது மட்டுமன்றி அவர்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்.
- அவர்களது வளர்ச்சியின் ஒவ்வொரு படியிலும் ஆசிரியர் அவர்களுக்கு வழிகாட்டியாய் இருத்தல் வேண்டும்.
- மாணவர்களுக்கு எப்போதும் வழிகாட்டியாய் இருப்பதோடு அவர்களிடம் முன்மாதிரியான நடத்தையுடையவர்களாகவும் பொறுமை, நட்பு, அன்பு போன்ற விழுமிய சிந்தனை உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை விளக்குவதோடு அப்பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.
- மாணவர்களுக்கு ஏற்படுகின்ற கல்வி சார்பான சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்து விடுதல் வேண்டும்.
- மாணவர்களுக்கு தண்டனை வழங்குதல் மட்டுமல்லாமல் அவர்களால் செய்யப்படும் சிறப்பான செயற்பாடுகளைப் பாராட்டுதல் வேண்டும்.
- பெற்றோர்களிடம் அடிக்கடி தொடர்பினை ஏற்படுத்துதல், இவ்வகையான செயற்பாடுகள் ஆசிரியர்களால் நடைமுறைப்படுத்தப்படும் போது ஆசிரிய மாணவ தொடர்பு கற்றலுக்கு வாய்ப்பாக அமைகின்றது.

**ஆசிரிய மாணவ இடைவினையுறவைத் தீர்மானிக்கும் காரணிகள்**

பாடசாலை இன்றைய இயந்திரமான உலகில் மாற்றங்களோடு தம்மை மாற்றிக் கொள்வதற்கு மனிதர்கள் முயற்சி எடுக்க வேண்டும். இம்மாற்றங்கள் பௌதிக சமூக கட்டமைப்புக்கள், செயன்முறைகள் உட்பட மானிட சிந்தனைகளிலும் உறவு முறைகளிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. ஆரம்பகாலக் கற்பித்தல் முறைகள் முற்று முழுதாக மனனம் செய்தலையே முக்கியமாகக் கொண்டிருந்தது. இடைக்காலங்களில் அம்முறைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இன்று நவீன கற்பித்தல் சாதனங்களின் வருகை நவீன கற்பித்தல் நுட்பங்களோடு கூடிய கற்றலுக்கு வழிகாட்டியுள்ளது எனலாம். இத்தகைய கற்பித்தல் நுட்பங்களில் மிக முக்கியமானது ஆசிரிய மாணவ உறவை வலுப்படுத்தும் நுட்பமாகும். இவ் வகையில் இத்தகைய உறவை வலுப்படுத்தும் காரணிகள் பலவாகும்.

- ஆசிரியர் சிறந்ததொரு முகாமையாளராக செயற்படும் நிலை.
- குழுக்களாகப் பிரிந்து மாணவர்களைச் செயற்பட விடுதல்.
- இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துதல்.
- சிறந்த கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- மாணவர்கள் யாவரையும் சமத்துவ உணர்வோடு நோக்குதல்.
- மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்தல்.
- கற்பித்தல் தவிர்ந்த ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் தேவையாயின் அவர்களுடன் கலந்துரையாடல்.
- பாடசாலை நிர்வாகத்தின் போதிய ஒத்துழைப்புக் கிடைத்தல்.

இத்தகைய காரணிகள் சாதகமாக அமையும் பட்சத்தில் ஆசிரிய மாணவ இடைவினையுறவு மேலும் வலுப்பெறும். மாணவர்கள் ஆசிரியர்கள் மேல் வைத்திருக்கும் நம்பிக்கை சரியான முறையில் அமையும் போது அவர்கள் இருசாராரினதும் உறவுமுறை வலுவடைகின்றது. ஆசிரியரின் கல்வித்தகைமை தரம், அறிவு, திறமை அடிப்படைகளும் இத்தகைய உறவின் மேம்பாட்டுக்கு காரணமாக அமைகின்றன.

ஆசிரியர்களின் ஆளுமை விருத்தி சிறப்பாக இருக்கும் பட்சத்தில் வகுப்பறையின் அவர்களது தலைமையை ஏற்று மாணவர்கள் செயற்படுவார்கள். இதனால் ஆசிரியர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது ஆளுமையை வளர்ப்பதற்கு முயல வேண்டும். சிறந்ததொரு தலைவராக வகுப்பறையில் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். தலைமைத்துவப் பண்பு நிரம்பியவரிடம் ஆளுமை அதிகமாகக் காணப்படும்.தலைமைத்துவ பண்புகளை வளர்ப்பதில் பல காரணிகள் ஆசிரியர்களுக்கு துணை புரிகின்றன.

- ஆசிரியர்களின் மொழியறிவு சிறப்பாக இருத்தல்.
- கற்பித்தலை விட பாடசாலையின் ஏனைய விடயங்களிலும் பங்கெடுத்துக் கொள்ளல்.
- ஆசிரியரது குரல் வளம் தெளிவாக இருத்தல், கற்பித்தலைச் சரியான முறையில் திட்டமிடல்.
- எடுத்துக்கொண்ட விடயத்தைத் தெளிவாக விளக்குதல்.
- ஏனைய ஆசிரியர்களோடு நல்லுறவைப் பேணிக் கொள்ளல்.
- தொடர்ந்து கற்றுக்கொண்டு இருத்தல்.
- வகுப்பறை முகாமையைச் சரிவரப் பேணுதல்.
- அதிபரோடு நல்லுறவைப் பேணுதல்.
- சமூகத் திறன்களைப் பெற்றுக் கொள்ளல்.
- எவரிடமும் பாகுபாடு கட்டாதிருத்தல்.
- சமூகப் பற்றுள்ளவராக இருத்தல்.
- இத்தகைய செயற்பாடுகள் சிறப்பாக வளர்க்கப்படுமிடத்து ஆசிரியர்களின் ஆளுமைப் பண்பு வளர்வதற்குரிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்

ஆசிரியர்களது உடல், உள ஆரோக்கியம் சிறப்பாக அமைய வேண்டும். ஆரோக்கியமான உடலிலேதான் ஆரோக்கியமான உள்ளமும் இருக்கும் என்ற பிளேட்டோவின் கருத்துக்களின் அடிப்படையில் சிறந்த உடல் உள்ளம் என்பவற்றின் விருத்தியிலும் கவனம் தேவை. இவை இரண்டினது வளர்ச்சிகளும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது. ஆகவே சிறந்த உடலுள ஆரோக்கியம் பேணவேண்டுமானால் சில விடயங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

- பாடசாலைகளில் மகிழ்ச்சியான சூழல் இருத்தல் வேண்டும்.
- ஆசிரியர்களது கருத்துக்களை வெளியிட வாய்ப்பளித்தல் வேண்டும்.
- ஆசிரியர்களுக்குரிய மதிப்பை வழங்க வேண்டும்.
- அவரது குறைபாடுகளை எடுத்துக் கூறுவதை விடுத்து நிறைவான அம்சங்களையும் பாராட்ட வேண்டும். இதன் மூலம் குறைகளை திருத்துவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படலாம்.
- தேவையான ஊக்குவிப்புக்களை வழங்குதல் வேண்டும்.
- பொருத்தமான பதவி உயர்வுகள் வழங்கப்படல் வேண்டும். - சுதந்திரமாகத் தொழிற்படுவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.
- கற்பித்தலுக்கிடையில் சிறிய இடைவெளி இருத்தல் வேண்டும்.
- தனது உடல் ஆரோக்கியத்தில் கவனம் எடுத்தல் வேண்டும்.
- குடும்ப உறவுகள் சீராக அமைதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் சிறந்த உடல், உள ஆரோக்கியம் பேணுவதற்கு மேற்கூறிய காரணிகள் சாதகமாக அமைய வேண்டும்.

ஆசிரிய மாணவ இடைவினை உறவு என்பது வகுப்பறைக்குள் மட்டுமல்லாமல் வகுப்பறைக்கு வெளியில் ஆனால் பாடசாலைக்கு உள்ளேயும் வளர்க்கப்பட வேண்டிய முக்கியமானதொரு விடயமாகும். எல்லாப் பிள்ளைகளையும் சமத்துவமாக நோக்குதல் அவசியம் ஆகும். அவர்கள் மத்தியில் எவ்விதமான ஏற்றத்தாழ்வுகளும் காணப்படக்கூடாது. மாணவர்களது மனங்களை வெல்பவர்களாக ஆசிரியர்கள் செயற்பட வேண்டும். மாணவர்களது வயது மனப்பாங்கு போன்றவைகளுக்கேற்ப புகழ்ச்சியும் தண்டனையும் கற்றலில் தேவையான போது வழங்கப்படல் வேண்டும். எதற்கெடுத்தாலும் மாணவர்களை வாய்க்கு வந்த வார்த்தைகளால் திட்டித் தீர்க்கக் கூடாது. இச்செயல்கள் எல்லாம் ஆசிரிய மாணவ இடைவினை உறவில் ஒரு விரிசலை ஏற்படுத்தி விடும்.

தம்மைப் பற்றிய விளக்கத்தை பெறல் என்பது ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் முக்கியமானதொரு விடயமாகும். தன்னை அறிந்து அதனூடாக மாணவர்களை அறிதல் என்னும் தத்துவம் இன்றைய கல்வி உலகின் தாரக மந்திரமாகும். வகுப்பறையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது ஆளுமையையும் நடத்தையையும் அடிக்கடி மதிப்பீடு செய்ய வேண்டிய நிலை ஆசிரியருக்கு ஏற்படும். தான் எப்படியானவர் என்பதை அறிவதோடு தமது கருணை, சுறுசுறுப்பு, நடுநிலமை போன்ற விடயங்களுக்கு விடையளித்துத் தொடர்ச்சியாக் தம் ஆசிரியத்துவத்தையும் நடத்தைகளையும் சுயபகுப்பாய்வுக்கு உட்படுத்த வேண்டி ஏற்படும். இத்தகைய தம்மைத் தாமே விளங்கிக் கொள்ளும் ஆராய்ச்சி ஆனது ஆசிரியர்கள் மத்தியில் ஒரு விதமான தெளிவான அறிவைக் கொடுக்கின்றது. தன்னை அறியும் ஒருவன் மற்றையவர்களையும் புரிந்து செயற்படுவது இலகுவானது. ஆகவே மாணவர்களைப் புரிந்து செயற்படுவதன் மூலம் ஆசிரிய மாணவ இடைவினையுறவு அர்த்தமுள்ளதாகின்றது.

இன்றைய கற்பித்தல் முறைகளில் குழுமுறைக் கற்பித்தல் ஆசிரிய மாணவ இடைவினையுறவை வளர்த்தலில் முக்கிய பங்கெடுத்துக் கொள்கின்றது. மாணவர்கள் குழுவாகச் செயற்படும் போது அவர்களுக்கான உதவிகளை ஆசிரியர் செய்ய முற்படுகின்றார். ஒவ்வொரு குழுவினது அங்கத்தவர்களை அறிந்து கொள்வதோடு கற்றலில் அவர்களின் இயலும் இயலாமைகளை அறிந்து அதற்கேற்ப அவர்களுக்கான உதவிகள், வழிகாட்டல்கள், வசதிகள் போன்றன வழங்கப்படுகின்றன. இந்நிலையானது அவர்கள் இருசாராரிடையேயும் உறவின் நெருக்கத்தை அதிகமாக்கி விடுகின்றது.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சேவைக் காலப் பயிற்சிகள் சேவைக்கு முன் வழங்கப்படும் பயிற்சிகள் போன்றனவும் அவர்களது ஆசிரியத் தொழிலில் மாணவ இடைவினையுறவிற்கு பெரிதும் உதவுகின்றது. இத்தகைய ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களிலும் தொடர் ஆசிரியர் கல்வியிலும் ஆசிரியர்களுக்கு வகுப்பறை முகாமைத்துவம் கற்பித்தல் முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் நுட்பங்கள் தொடர்பான விடயங்களெல்லாம் கற்பிக்கப்படுகின்றது. இவைகள் ஆசிரிய மாணவ உறவை வளர்த்து விடுகின்றன.

கலைத்திட்டச் செயற்பாடுகள் இன்று காலத்துக்கு காலம் மாற்றப்பட்டு வருகின்றன. கலைத்திட்டம் என்பது ஒரு நாட்டின் ஒரு சமூகத்தின் தேவைகளை கருத்திற் கொண்டதாக அமைதல் வேண்டும். கலைத்திட்ட உள்ளடக்கத்தில் இடம்பெறும் பாடங்கள் பாட அலகுகள் என்பன அந்த சமூகத்தின் தேவையை நிறைவு செய்ய வேண்டும். ஆசிரிய மாணவ உறவை வலுவடைய செய்ய வேண்டும். ஒரு மாணவனின் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாக அமைய வேண்டும்.

எனவே இவ்வகையில் தொகுத்து நோக்கும் போது இன்று பாடசாலைகளில் ஆசிரிய மாணவ உறவின் இறுக்க நிலையில் சில இடங்களில் ஒரு தளர்வு ஏற்படுகின்றது. ஆரம்ப காலக் கல்வி நடவடிக்கைகளை எடுத்து நோக்கும் போது ஆசிரிய மாணவ உறவிற்கு ஒரு அர்த்தம் இருந்தது. இன்று எல்லாமே வெறும் சூக்குமமாகத் தெரிவது போல உணர முடிகின்றது. பாடசாலைகளிலும் ஆசிரிய மாணவ உறவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் பால் நிலை என்பது முக்கியமாகின்றது. ஆண் ஆசிரியர்களிடம் பெண்களும் பெண் ஆசிரியர்களிடம் ஆண்களும் கற்பதை இன்னமும் பல சமூகங்கள் அங்கீகரிக்கவில்லை. மாணவர்களும் வெட்கம், புதிய சூழல், பயம் என்ற காரணிகளின் தாக்கங்களுக்கும் ஆளாகின்றார்கள். ஆனாலும் எதிர்ப்பாலாரிடம் கற்பது சிறந்தது என்பது ஒரு கருத்தாகக் காணப்படுகின்றது.

எனவே இன்றைய நிலையில் பாடசாலைக் காலங்களில் ஆசிரிய மாணவ இடைவினையுறவு சரியான முறையில் பேணப்பட்டு வருகின்றமை வரவேற்கப்பட வேண்டியது.

**கலாநிதி. திருமதி. ஜெயலட்சுமி இராசநாயகம்.**

தலைவர்

கல்வியியற்றுறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர் நலன்புரிச் செயற்பாடுகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் நலன்புரிச் செயற்பாடுகள்
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# - மிதிவண்டிப் பயணங்கள் மீண்டு வர வேண்டும் -

வாழ்க்கை வட்டம் (Life Cycle) உணவுச் சங்கிலி (Food Cycle) இயற்கை சங்கிலி (Environment Cycle) என பல Cycles மனித வாழ்வில் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. அதே போல இரண்டு வட்டச் சில்லுகள் கொண்டு ஆக்கப்பட்ட Bicycles மிதிவண்டிகளும் மனித வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதிவரை ஒவ்வோர் வகையிலும் இணைந்தே வந்து கொண்டிருக்கின்றன. வட்டச் சில்லுகள், பிறீவீல், சங்கிலி, கான்டில், சீற், மட்காட்டுகள், பெடல்கள், போன்றவற்றால் இணைப்புகளில் அங்காங்கு சிறு இரும்புக் குண்டுகளை (Balls) வைத்து உருவாக்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகள் சிறுவர்க்கானவை, வளர்ந்தோர்க்கானவை, பெண்களுக்கானவை, ஊனமுற்றோர்க்கானவை, வைத்திய சேவைகள் தேவைப்படுவோர்க்கானவை எனப் பல வடிவில் வடிவமைக்கப்பட்டும் பாவனையில் உள்ளவை. பொதுவாக மிதிவண்டி என்றதும் 28", 26" துவிச்சக்கர வண்டிகள் தான் ஞாபகத்தில் வரும். அதிலும் ஒரு தடவை சில்லுச் சுற்றிவர 6 1/2 அடிகள் தூரம் கடக்கும் ஆண்கள் மிதிவண்டியும், 6 அடி தூரம் கடக்கும் மகளிர் மிதிவண்டிகளும் பேசப்பட்டாலும் பலவகையான மிதிவண்டிகள் பற்றியும் அவற்றின் பயன்பாடுகள் பற்றியும் ஆரா்ய முற்படுகிறோம்.

பிரயாணத்துக்கும், பொதிகள் ஏற்றி இறக்கவும், உல்லாசப் பிரயாணங்களுக்கும் என உலகில் பலவித போக்குவரத்துச் சாதனங்கள் உள்ளன. கடல்வழி, வான்வழி, தரைவழி பிரயாணங்கள் என்பனவற்றுள் எல்லாப் போக்குவரத்தும் அடங்கும். இவையும் இயந்திரப் போக்குவரத்துச் சாதனங்கள், மனித வலுப் போக்குவரத்துச் சாதனங்கள், இயற்கையோடு இணைந்த பொறிமுறைச் சாதனங்கள் என வேறுபடுத்தப்பட்டாலும் அனைத்தும் அறிவியலைக்கொண்டு ஆக்கப்பெற்றவையே. இவற்றுள்ளும் சூழல் பாதுகாப்புப் பயணங்கள், சூழல் மாசடையச் செய்யும் சாதனங்கள் என இருவகை போக்குவரத்துக்கள் உள்ளன. பொதுவாகவே கணித வலுவையும், இயற்கைச் சக்தி அறிவியலையும் பயன்படுத்தி மேற்கொள்ளும் போக்குவரத்துக்கள் சூழலை மாசடையச் செய்யாதவையாகும். மிருக வலுவைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் போக்குவரத்துக்காக காளைகள், குதிரைகள், கழுதைகள், நாய்களும் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் தனியொருவரது பயணத்திற்கு ஆக்கப்பெற்றதே துவிச்சக்கர வண்டிகள் ஆகும். ஆனாலும் இருவர் மூவர் ஏறிச் சவாரி செய்வதும் உண்டு. தொழில்நுட்ப பொறிமுறை வளர்ச்சியால் போக்குவரத்துக்கென வடிவமைக்கப்பெற்ற கப்பல், விமானம், புகைவண்டி, பேரூந்து, மகிழூந்து, இருசில்லு மோட்டார் வண்டிகள் என்பன சூழலை வெகுவாக மாசுபடுத்துகின்றன. எரிபொருள் கழிவுகள், புகை, இரைச்சல், வேகஅதிர்வு போன்றன சூழலை மாசுபடுத்துவதுடன், இவையாவும் இயங்க எரிபொருள் தேவைப்படுவதால், எரிபொருள் இறக்குமதிக்காக நாட்டின் பெரும் பொருளாதாரம் செலவாகின்றது. வளர்முக நாடுகளில் இயற்கைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல்சமநிலை, பொருளாதாரம், வீதிகள், வீதி அபிவிருத்தி போன்றனவற்றிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மிதிவண்டிகள் எவ்வித சூழல் பாதுகாப்புமின்றி இயக்கப்படுகின்றன. மரத்தால் அல்லது இரும்பால் செய்யப்பட்ட சில்லுகளைப் பயன்படுத்தும் வண்டிகள் பாதையில் தடயங்களை உண்டாக்கிப் போக்குவரத்தைக் குழப்பியடிக்கின்றன. குதிரை, எருது போன்ற மிருகங்களை வளர்ப்பதும் பயன்படுத்துவதும் மிகவும் சிரமமானதும் செலவானதும் ஆகும்.

பலவித பரீட்சார்த்த முயற்சிகளின் பின்னர் இப்போதுள்ள நிலையில் மிதிவண்டிகள் வடிவமைக்கப்பெற்று பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் பாவனைக்கு வந்தது. இங்கு போக்குவரத்துக்கென வடிவமைக்கப்பட்ட இச்சாதனம் சிறு பொதிகளைக் காவிச் செல்லவும், காவிச் சென்று விநியோகிக்கக்கூடியவாறு பின்னர் மறுசீரமைக்கப் பெற்றது. தபால் விநியோகிப்பவர், பாடசாலை மாணவர்கள், கந்தோர் ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள் கூட இவற்றைப் பயன்படுத்தித் தமது செயற்பாடுகளைத் துரிதமாகவும் திட்டமிட்டும் செய்து கொண்டனர். பேராசிரியர் துரைராசா பருத்தித்துறையில் இருந்து மிதிவண்டியில் யாழ் பல்கலைக்கழகம் வந்து சேவையாற்றியது விதந்துரைக்கத்தக்கது. இலங்கையில் உள்நாட்டுப் போர் நடைபெற்ற காலங்களில், இவற்றின் தேவை நன்கு உணரப்பெற்றது. 1995இல் யாழ்ப்பாணப் பெரும் இடப்பெயர்வின் போது ஆட்கள் பொருட்களை ஏற்றி இறக்கவும், பாதைகள் தடைப்பட்டுப் போக்குவரத்து துண்டிக்கப்பட்ட போது கூட பெரும் உதவியாக இருந்தது. விறகு ஏற்றி வந்து விற்றுச் சீவிக்கவும், இதனுடன் இணைந்துள்ள டைனமோ (Dinamo) வைச் சுழலச் செய்து மின்சாரத்தைப் பெற்று செய்திகள் அறியவும் மன அழுத்தம் குறைப்பதற்கான இசைப்பாடல்களைக் கேட்டு ஆறுதல் கொள்ளவும் உதவியது பெரும் விந்தைகள் தான். இவையும் நடந்தன. மெய்மைகள்.

மிதிவண்டிகள், இரண்டு சில்லு, மூன்று சில்லு, நான்கு சில்லுப் பொருத்தப்பட்டு பற்பல தேவை உடையவர்களாலும் பாவிக்கப்படுகின்றன. சிறுவர், நோயாளிகள் முதியவர்கள் என்பவர்களுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பெற்று இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை ஐரோப்பா முழுவதிலும் பயன்படுத்தப்படவே கீழைத்தேச நாடுகளிலும் பாவனைப்படுத்தப்பட்டு வந்தன. இதன் பாவனைகள் 1920 ஆண்டளவில் அமெரிக்காவில் வீழ்ச்சி அடையத் தொடங்க அவ் வெற்றிடத்தை சிறிய, பெரிய, நடுத்தர இயந்திரங்கள் பொருத்தப் பெற்ற விரைவு வண்டிகள் பிடித்துக் கொண்டன. இலங்கையில் முன்னைய காலங்களில் வீட்டுக்குவீடு 2 - 3 மிதிவண்டிகள் இருக்கும். அநேகமான அம்மாக்களும், அப்பாவுக்கும், பாடசாலை செல்லும் மாணவர்களுக்குமாக இருந்து வந்தன. அகதி அந்தஸ்து பெற்று வெளி நாடுகளில் வசிப்பவர்கள், இங்குள்ளவர்களுக்கென அனுப்பிவரும் காசு நாயணமாற்று விகிதத்தால் பல்கிப் பெருகவே இன்று வீட்டுக்கு வீடு இரண்டு மூன்று இருசில்லு வாகனங்களுடன் ஒரு வான் அல்லது கார் நிற்கின்றது. ஆனாலும் ஐரோப்பிய நாடுகளில், டென்மார்க் கொப்பள்கேள் பெருந்தெருக்களில் பெரும் எண்ணிக்கையான ஆண் பெண் மிதிவண்டியில் சென்று ஆச்சரியப்படுத்துகின்றனர். மேலை நாட்டவர்கள் இவை கேடுதருபவை என ஒதுக்கி விடுகிற பழக்க வழக்கங்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனைப் பொருட்களையும் உணவு முறைகளையும் வளர்முக நாட்டவர் போற்றிப் பின்பற்றி வருகின்றனர். அல்லது மேற்கு நாடுகள் எமது நாட்டுக்கு உதவுகிறோம் என்ற போர்வையில் பின்தங்கிய நாடுகளுக்கு அனுப்பியும் விடுகின்றனர். டென்மார்க் கொப்பள்கேள் நாட்டில் ஏறத்தாள 5 லட்சம் மக்கள் மிதிவண்டிகள் பாவிப்பதாகவும் அந்த நாட்டின் ஆட்சி நிர்வாகம் மிதிவண்டிப் பயணத்தால் ஏற்படும் உடல் உள வலிமையை அறிந்து 350 கிலோ மீற்றர் நீளமான தரைவழிப்பாதையும் அமைத்துக் கொடுத்துப் பாவனையாளர்களை ஊக்குவித்து வருவதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

எரிபொருள் கழிவுகளால் சூழல் மாசடைவது, வீதிகள் பழுதடைவது, ஓசை அதிர்வுகளால் ஏற்படும் உடல் உளப் பாதிப்புக்களைக் கருத்தில் கொண்ட மேலை நாட்டவர்கள், மிதிவண்டிப் பயணங்களுக்கு மாறிவர, நாம் நம்மிடமிருந்த மிதிவண்டிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, விரைவு வண்டிகளுக்கு மாறி வருகின்றோம். ஆரம்ப காலங்களில் ஹர்குலிஸ், றலி, ஹீரோ, ரம்மீஸ் என பல வகைகளில் மிதிவண்டிகள் பாவனையில் இருந்தன. இன்று உள்ள மூத்தவர்கள் அம்மிதிவண்டிகளில் செய்த சாகசங்கள் கடும் உழைப்புக்கள் பற்றிப் பேசுவர். இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட றலி மிதிவண்டிகளுக்கு இன்னமும் இங்கு பெரும் மவுசு உண்டு. தொழில் நுட்பப் புரட்சியுடன் யப்பான் தேசத்து லுமாலா, ஏசியன் பைக் என்பனவும் அன்றைய நாட்களில் மேலும் சீரமைக்கப்பெற்ற பாரம் குறைந்து இலகுவில் கையாளக்கூடிய மிதிவண்டிகள் இறக்குமதி செய்யப்பட்டு அனேகரால் பாவிக்கப்பெற்று வந்தாலும், சிறிய நடுத்தர மோட்டார் வண்டிகளும் வந்து இறங்கிய வண்ணமே உள்ளன. அண்மைக்காலங்களில் வேலைக்குச் செல்லும் பெண்களின் தொகை அதிகரித்து விட்டதனால் அவர்களின் தனிப்பாவிப்புக்கும் இலகு பயணத்துக்கெனவும் பல்வகை இலகு மோட்டார் வண்டிகளும் இறக்குமதி செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. வளர்ச்சி அடைந்த நாடுகளில் இருந்து இயந்திரங்கள் எம் நாட்டினுள் வந்து சேர அவற்றை இயக்குவதற்காக எரிபொருள் வள நாடுகளிலிருந்து எண்ணைவகை இறக்குமதி செய்யப்பட எமது நாட்டில் அந்நியச் செலவாணி விரயம் ஆகின்றது. ஒரு காலத்தில் இங்கிலாந்து அரிசி, றப்பர், தேயிலை, தேங்காய் போன்ற உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்து பெற்றுக்கொண்ட அந்நிய செலவாணியும் இப்போது கிடைக்கப் பெறாமையால் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் நாடு தள்ளப்பட்டுள்ளது.

ஆரம்ப காலங்களில் 9 - 10 வயதுள்ள சிறுவன் மிதிவண்டி ஓட்டத் தெரிந்திருந்தால் அது பெரும் சாதனையாகக் கருதப்பட்டதுடன் வீட்டின் தேவைகளில் பாதிக்கும் மேற்பட்ட வேலைகளை மிதிவண்டிகளின் உதவியுடன் செய்து முடிப்பான். தனிப்போக்குவரத்தின் அவசியமும் தேவையும் உணரப்படவே, சிறுவர்கள், பெரியவர்கள் மட்டுமல்ல பெண்களும் மிதிவண்டி செலுத்தக் கற்றிருந்தனர். அதிலும் அப்பாவின் சயிக்கிளின் (Bar) பாருக்குக் கீழாக காலைவிட்டு மிதிவண்டி ஓடுவதும், சாதனையாகவும் ஒரு சர்க்கஸ் போலவும் இருக்கும். வாரமொருதடவை, எண்ணை தேய்த்து முழுகும் வழமையுள்ள எமது மக்கள் அன்றைய தினத்தில் மிதிவண்டிகளையும் துடைத்து எண்ணையிட வேண்டிய பாகங்களுக்கு எண்ணைவிட்டுப் பூசிப் பாதுகாத்து வந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகக் குறுந்தூரப் பயணங்கள் செல்வதற்கும் சந்தைப் பொருட்கள் வாங்கிவரப் பயன்படுத்தப்பட்டாலும் துவிச்சக்கர வண்டிப் பயணத்தால் பயிற்சியால் ஏற்படுகின்ற உடல் நலன்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும். சாதாரண உடற்பயிற்சிகள், ஜிம்னாஸ்ரிக் பயிற்சிகள் தருகின்ற சுகத்தையும் பயன்களையும் விட அதிகம் அதிகமாக உடல் ஆரோக்கியத்துக்கு உகந்தது என புதிய பொருளாதார நிறுவனம் 2016இல் மேற்கொண்ட ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. தேவையற்ற கொழுப்புகளை உடலில் இருந்து அகற்றுவதால் இருதயம் சம்பந்தமான நோய்களையும், மாரடைப்பையும் இல்லாமல் செய்வதால் இரத்தோட்டம் சீராக நடைபெற மூளை சுறுசுறுப்பாகச் செயல்ப்படுகிறது. பொதுவாகவே இருக்கையில் அமர்ந்தபடி செலுத்துவதால் உடல் எடை முழுவதும் கால் மூட்டுக்கள் தாங்க வேண்டி வராதிருக்கவே மூட்டு வியாதிகள், எலும்புத் தேய்வனவு ஏற்படுவதைத் தடுக்கின்றது. துவிச்சக்கர வண்டிகள் மிக வேகத்தில் செலுத்தப்படுவதால் சூழலை ரசித்துக்கொண்டு பயணிக்க மன அழுத்தங்களை அறவே நீக்கிவிடுகின்றன. விரைவு வண்டிகள் ஏற்படுத்தும் பயங்கர ஓசை அதிர்வுகள் இல்லாமல் அமைதியாகவும் சந்தோசமாகவும் பயணிக்க முடியும். மிதிவண்டி ஓட்டுதல், உடற்பயிற்சிகள், யோகாப் பயிற்சிகளை மன ஆறுதலுடன் ஆன்மீக பலத்தையும் வளர்த்து விடுவதால் விட்டுக் கொடுத்தல், கட்டுப்படுத்தல், தலைமை தாங்கும் இயல்பு வெற்றியையும் தோல்வியையும் ஏற்றுக் கொள்ளும் உயரிய பண்புகளையும் வளர்த்து விடுகின்றது. பயிற்சியின் போது பின்னால் அண்ணன் பிடித்துக் கொண்டு வருகிறான் என்ற நம்பிக்கையுடன் உன்னி, உன்னி மிதித்து விரைந்து தூரம் சென்ற பின்னர் திரும்பிப் பார்க்கையில் அண்ணன் எப்போதோ விட்டுத் தூரத்தில் நிற்பது தெரிய வரவே "என்னாலும் முடியும்" என்ற நம்பிக்கையும் பழகும் போது சமநிலை எடுக்கும் ஆற்றலையும் வளர்த்து விடுகின்றது. விரைவு வண்டிகள் ஓட்டும் போது மனம் கண் மனச்சோர்வு அடைவதுடன், விபத்துக்கள் ஏற்படும் போது பேரழிவுகள் நிகழ்கின்றன. மிதிவண்டிப் பயணம் மிகவிரைவாகச் செய்தாலும் 10 - 15 km வேகத்துக்கு மேலாகச் செல்ல முடியாததால் இழப்புகளும் குறைவாகவே ஏற்படுகின்றன. "விரைவாகச் செலுத்தின் விபரீதம்" என்ற முதுமொழியையும் நாம் ஞாபகத்தில் கொள்தல் அவசியம்.

சிறியரக மோட்டார் வண்டிகள் கூட செல்லமுடியாத ஒடுங்கிய பாதைகளிலும் மிதிவண்டிகளே செலுத்த முடியாத மணல்ப்பாங்கான நிலங்களும், மலை மேட்டுப் பிரதேசங்களும் இலங்கையிலும் உலகிலும் காணப்படுவதால் அவற்றூடாகவும் நீர்நிலை கால்வாய்களைக் கடக்க வேண்டிய வேளைகளில் உருட்டியோ தூக்கியோ சென்று பயணிக்கக் கூடிய வகையிலும் மிதிவண்டிப் பாவனை சிறப்புறுகிறது.

தென்மராட்சி விளையாட்டுக் கழகங்களின் சமாசம் ஆண்டு தோறும் தொடராக நடாத்தி வரும் கழகங்களுக்கிடையேயான துவிச்சக்கரவண்டி ஓட்டும் போட்டியில், நாவற்குழியைச் சேர்ந்த கந்தர் இராசதுரை என்ற வீரர் தொடர்ந்தும் 1964 - 65, 66ம் ஆண்டுகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதும் உலக சாதனையாளர் பதிவேட்டில் "கின்னஸ்" இடம் பிடித்த யாழ்ப்பாணத்து இளைஞர் 1982ம் ஆண்டில் 'ஒஸ்மேனியாக்' கல்லூரி மைதானத்தில் வலம்புரிவாக இரவுபகலாகத் தொடர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டிச் சாதனைகள் புரிந்தும் வலம்புரி என்பது வழமையாக இருக்கையில் இருந்து வண்டியைச் செலுத்துவதற்கும் மாறாக "கரண்டில்" இல் இருந்து செலுத்துவதாகும். இவ்வாறு செலுத்திக்கொண்டு 1982ம் ஆண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கும், பாணந்துறைக்கும் இடைப்பட்ட 480 மைல் தூரத்தை கடந்ததையும் இளைஞர்களின் ஆற்றல் வளர்த்து விடுவதாகும். இவ்வாறே வருடாவருடம் யாழ்ப்பாணத்து இளைஞர் யுவதிகளிடையே தினகரன் பத்திரிகை நிறுவனத்தினர் மிதிவண்டி ஓட்டும் போட்டிகளை நடாத்தி ஊக்குவித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறான போட்டியில் 1966ம் ஆண்டில் நடைபெற்ற 25 மைல் மரதனோட்டப் போட்டியில் நாவற்குழியில் தம்பிப்பிள்ளை கணேசராசா என்பவர் தொடர்ந்து ஓடி முடித்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறு சாதனையாளர்கள் வெளிக்கொண்டு வருவதற்கும் மேலாக இப்போட்டிகளில் பெறப்படும் பணத்தை முழுமையாக அல்லது பகுதியாக அறநெறி நிலையங்களுக்கும், முதியோர் இல்லங்களுக்கும் பகிர்ந்தளிப்பதும் மனித நேயத்தை பேணும் உயர்பண்பையும் வளர்த்து விடுகிறது. போலந்து நாட்டின் அழகிய மலைத்தொடர்களுக்கு இடையேயும், சமவெளிகளிலும் 9 நாட்கள் தொடராக நடாத்தப்பட்ட 1100km மிதிவண்டி ஓட்டப் போட்டியில் 2016ம் ஆண்டில் பெற்றுக்கொண்ட முழுவருமானமும் புற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் நோய்க்கான காரணிகளைக் கண்டறியும் ஆராய்ச்சிக்காகவும் செலவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதால் இவ்வாறான போட்டிகளும் முன்மாதிரிகளும் காலந்தோறும் உலகெங்கும் இலங்கையிலும் நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கின்றன. அண்மையில் கூட 2022 இல் ஊனமடைந்திருப்பவர்களுக்கு உதவும் வகையில் வடக்கின் பருத்தித்துறையில் இருந்து தெற்கின் தெய்வேந்திர முனைவரை ஒரு போட்டி நடைபெற்றதும் அதில் பரிசு பெற்றவர் முழுத்தொகையையும் போட்டியை ஒழுங்கமைத்தவர்கள் தங்களுக்கான இலாபப் பணம் முழுவதையும் உடல் பாதிப்புக்குள்ளானவர்களுக்காக வழங்கியமையும் இங்கு விதந்துரைக்கத்தக்கது. இவ்வாறான பல நன்மைகள் தரும் மிதிவண்டிப் பயணம் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மீண்டும் பாவனைக்கு வரும் காலம் கண்ணில் தெரிகிறது. வாழ்க்கை ஒரு வட்டம். பழையன கழிதலும் புதியன பழக்கத்துக்கு வருதலும் புதிதாய் எழுந்தவை. பழமையாகிப் போவதும் எல்லாமே Recycle ஆவதும் உலக நியதி ஆகும்.

**கந்தையா மயில்வாகனம்**

கந்தையா கனகம்மா நிதியம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Reading for Academic Purpose

Research studies on reading emphasize the need for acquiring necessary processing skills, which could facilitate the learners' efforts to comprehend vast amount of information from the texts they process or read. There are many students who can read at a much higher level of comprehension, gathering new conceptual information from texts, synthesizing new information from multiple texts, critiquing information in text and using their comprehension skills to reinterpret texts (Elley, 1992). It is also important to recognize that many people around the world read in more than one language. Large populations of people have learned to read in second or third languages for a variety of reasons, including interactions within and across heterogeneous multilingual countries, large-scale immigration movements, global transportation, advanced education opportunities, and the spread of language of wider communication (Grabe, 2009).

According to Grabe (2009), "As fluent readers, we read many different types of texts, some that we consciously intend to read, and some that we just seem to pick up or encounter. In more formal settings we expect to read in academic contexts or in work place environments as part of learning or engaging in our jobs. Many of us also engage in reading that may be quite demanding in educational, professional, and occupational settings. In these latter settings, a great deal of learning occurs; part of that learning requires that we read and interpret informational texts in line with the tasks that we engage in and the goals that we set....."

Based on Grabe's suggestions, this study is strictly structured around the domain of '$L_2$ academic reading'. It is firmly rooted on the findings of $L_2$ reading studies which bring out the necessity of automatizing the reading mechanisms among the young, emerging and less privileged academics who are identified as "Low- capacity readers' particularly in the L2 contexts.

Further to this, in our Sri Lankan context, undergraduates in the Universities have to develop their L2 academic reading skills. These growing academics have plenty of needs to master their L2 reading abilities to continue their higher education.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- They have to read research articles, abstracts and books to enhance their academic knowledge.
- They have to update the current information by searching some new findings.
- They have to acquire the accepted style of academic genre through vast exposure to academic discourse.
- Eventually, they have to or can develop their academic writing skills by exposing themselves to numerous academic articles in English.
- They have to transfer these inherited skills to the younger generation and motivate them to read.

Crystal (1995) while locating the essentiality of L2 reading indicates ".....the rise of English as a global language has had a major impact on educational systems around the world and the demands for reading in a second language. In countries around the world, school systems require students to learn English for access to information and for the eventual ability to compete economically and professionally. Reading in English provides these students to develop their L2 abilities to the point at which advanced academic curriculum goals can be achieved."

Again Grabe (2011) re-emphasizes the need for developing the L2 reading abilities among the tertiary level $L_2$ readers. He states that L2 reading skills represent a significant concern as the $L_2$ readers negotiate careers and seek advancement in modern economies. A person's future opportunities for success and prosperity will be even more entwined with skilled reading abilities. It is therefore an important societal responsibility to offer every person the opportunity to become a skilled reader, and in many cases, this means becoming a skilled L2 reader, or in this research context, an automatized skilled $L_2$ reader.

In support of the above thought and suggestions, this research intends to target an important social responsibility – automatizing the L2 academic reading skills of the less automatized $L_2$ readers during their graduation period. It has been the continuous observation in the field of English Language teaching where most of the low capacity level $L_2$ readers are allowed to follow their lessons with the automatized or fluent readers. This kind of situation never facilitates those poor readers to develop their processing abilities. As a result of this, the study conducted here introduces a strong foundation along with a feasible Automaticity Training Programme (ATP). This ATP is structured in accordance with the models of L2 reading stemmed from Information / Cognitive processing approaches discussed in the field of teaching English as a second language.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.2.1 More insights to L2 reading in academic context.

Reading ability can be improved by teaching how to read for particular purpose (Anderson, 2000). First of all, as teachers of L2 reading we have to know more about different purposes of L2 reading. Grabe (2009) has listed six major purposes of $L_2$ reading, particularly in academic settings.

1. Reading to search for information(Scanning and Skimming).
2. Reading for quick understanding (Skimming).
3. Reading to learn.
4. Reading to integrate information.
5. Reading to evaluate, critique and use information.
6. Reading for general comprehension (in many cases, reading for interest or reading to entertain).

When we consider all those six purposes, it is clear that an $L_2$ reader in an academic context has to focus on all these purposes. Different purposes for reading also tend to impose differing levels of demand on the reader in order to maintain an acceptable "standard of coherence" (Linderholm et al, 2004).

Among the six purposes, mentioned above, the last four are highly demanding for an $L_2$ academic reader.

Reading to learn is often carried out in academic and professional settings. We read to learn when the information in a text is identified as important and when that information will be used for some task or may be needed in the future (Grabe, 2009).

Reading to learn places more processing demands on the reader because the reader is expected to remember the main ideas and many supporting ideas and be able to recall this information as needed (Carver, 1992). The effective reader organizes the content within a frame that is coherent and accurate with respect to the information presented in the text (Linderholm & Van den Brock, 2002). Grabe (2010), further states that the reader also has to connect, the text content with information established in the reader's long- term memory (or prior knowledge). Particularly, in academic reading expectations for using supporting information for creating an organizing frame of reference (e.g - organizing information by cause – effect, comparison - contrast ), and for building a close integration with prior knowledge are usually exercised by any kind of academic readers.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Perfetti (1999) explains that reading to integrate information requires the reader to synthesize (and learn) information from multiple texts or bring together information from different parts of a long text such as a long and complex chapter in a text book.

Chall (1983) re- affirms this and states that the reading to integrative purpose represents a more complex and more difficult task for readers in academic and professional settings than reading to learn.

In the case of multiple texts, the reader must decide how to create his or her own organizing frame for the information because none is provided by the combined set of texts. Readers in academic contexts often have to decide which aspects to select, prioritize, and highlight, and then create a coherent organizational frame around the full set of information to be synthesized (Grabe , 2009).

It is also true in the Sri Lankan context where most of the school readers approach reading as a general skill through which they attempt to develop their minimal comprehension abilities in order to become successful in state - based national examinations. These readers rarely think of entering into the complexity of the academic reading. The strategies they employ during school reading are based on answering questions related to reading comprehension.

However, these readers have to be exposed to some strategies related to academic reading once they start their graduation. These strategies are related to reading processes, which are primarily cognitive.

While considering reading as a much complex cognitive process, reading to evaluate, critique and use information often necessitates an increased level of competence in the domain of reading for academic purpose. In academic and professional settings, readers are at times asked to evaluate and critique information from multiple texts, or from one long text, requiring them to make decisions about which aspects of the text are the most important, most persuasive, least persuasive or most controversial. Moreover, readers need to decide how to relate the text information to other information inter-textually and to their prior knowledge and beliefs. The greatest demand of this type of reading involves the application, and especially rhetorical control, of a reader's attitudes, emotional responses, interests and preferences to the interpretation of the text (Grabe , 2009). This level of academic reading is usually referred as the automatized level of reading where extensive inferencing and background knowledge come into play.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Therefore, the primary motif of any kind of L2 academic reader is to aspire this level where he/she can control and manipulate parallely distributed cognitive processes to become successful in comprehending the over role meaning of the texts At this stage, the reader has to exercise his/her discourse level competence which provides ample strategies (cognitive, as well as linguistic) to interpret the texts.

According to Linderholm & Van den Broek (2002) "...successful reading includes the ability to adjust processing in such a way that learning goals, as a function of reading purpose, are met.

Difference in purposes of reading can influence the role of manipulating different types of processes. There are ranges of studies in educational psychology and discourse processing that demonstrates significant differences in comprehension processing as a result of different purposes for reading (Linderholm & Van den Broek, 2002).

Multiple studies have shown that students with low-domain, or background knowledge read with the purpose of gaining comprehension from close reading of a text. These readers spend most of their attentional energy on bottom- up or lower – level processing strategies. However, students with high domain and strong schematic knowledge read to build a more elaborative knowledge base and draw more selectively from the text. These distinct types of reading lead to differing performances on various post reading tasks (Adams Bell, & Perfelti, 1995).

The second type of readers with multiple text processing capabilities, in accordance with their different purposes, can reach an automatized level in reading whether Ljor $L_2$. Pressley (2002), has argued that reading for different purposes has a strong empirical research base in verbal-protocol studies. These studies demonstrate that readers read for different purposes and that they adopt different processing strategies to carry out their reading purposes.

Caver (1990-1992) also has stated that those engage in different types of processing while dealing with different purposes can steadily improve their processing strategies and develop their discourse competence.

**Mr. Vanniyasingam Paranthman,**
*BA (Hons), Ma (ling), Ma (TESL), M.Phil (Ling),*
*Senior Lecturer in ELT,*
*DELT,*
*University of Jaffna.*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமூகத் தொடர்பாடல் செயற்பாடுகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத் தொடர்பாடல் செயற்பாடுகள்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் பதிவுகளில் சில...













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

எமது அதிபர் திரு. சின்னத்தம்பி பவளகுமாரன் அவர்களின் மணிவிழாச் சிறப்பு மலர் மலர்வதற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து எனை இயங்க வைத்த எமது பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி தனுஷியா மகாதேவன் அவர்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அத்தோடு என்னோடு உடனின்று உழைத்தவரும், அட்டைப் படங்கள் மற்றும் சான்று பகரும் படங்களைச் சரிப்படுத்தியும், வரிசைப்படுத்தியும் அமைத்துத்தந்த திரு. த. துளசிகரன் ஆசிரியரின் உழைப்பு என்னென்றும் போற்றுதற்குரியது. அடுத்து தேவையான வாழ்த்துச் செய்திகளையும் அவர்களின் படங்களையும் பெற்றுத் தந்ததோடு பாடசாலை, Mickey Printers வரை அவர்களின் பணி நீண்டு சென்ற திரு. திருமதி கேதீஸ்வரன் ஆசிரியர் கோகிலா ஆசிரியை என்றென்றும் நன்றிக்குரியவர்கள். என்னோடு கூட நின்று உழைத்த திரு. ஜெபநேசன் ஆசிரியர் அவர்களுக்கும் நன்றி.

மணிவிழா குழுவினர், மணிவிழா மலர் குழுவினர், பழைய மாணவர் சங்கம், பழைய மாணவர் சங்கம் பிரித்தானியா, பழைய மாணவர் சங்கம் கனடா, பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆசிச் செய்தி தந்து வந்தோர், வாழ்த்துச் செய்தி தந்து மகிழ்ந்தோர் இம்மலரினை ஆய்வு செய்து ஆய்வுரை வழங்கியமர்ந்திருக்கக்கூடிய திரு. ச. லலீசன், விரிவுரையாளர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இவற்றுக்கும் மேலாக எம்மோடு இணைந்து இவ்விதழாக்கத்திற்கு உறுதுணை புரிந்த Mickey Printers இற்கும் கோடி நன்றிகள்.

**திரு. பா. விக்னேஸ்வரன்**
**இதழாசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Print@Mickey-Chava
021-2-27-17-07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org